# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

மார்ச் – ஏப்ரல் 2021

இதழ் 05



" ஈழமண் வாசனையோடு
பூத்ததொரு மல்லிகையே
ஈர்த்ததுவே இதயங்களை
எழுதுகோல் ஏந்தியே "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்நெஞ்சங்களே வணக்கம்.

அன்பான வாசகர்கள் தமிழ்நெஞ்சம் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் தங்களின் ஆக்கங்களை மின்னஞ்சல் வழி அனுப்பித் தாருங்கள்.

இதழ் ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்தில் வெளியிடப்படுகிறது.

இதழைப்படிப்பதுடன் நில்லாமல் இதழ் பற்றியக் கருத்துகளையும் பதியும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

https://tamilnenjam.com

editor@tamilnenjam.com

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மார்ச் – ஏப்ரல் 2021

இதழ் 05

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email : muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

அன்புக்குரிய வாசகர்களே வணக்கம்!

பெண்ணின்றி அமையாது உலகு எனச் சொல்லுமளவு, மகளிரின் பணிகள் எல்லா இடங்களையும் அழகுற நிரப்பி, சாதனைகளின் உச்சம் தொடுகின்றன.

எத்துறையில் தான் சாதிக்கவில்லையவள்?

சோதனைகள், வேதனைகளைத் தாங்கி வெற்றியின் பாதையில் வீறு கொண்டு பயணிக்கும் பெண்கள் இவ்வுலகுக்கு வரப்பிரசாதமாய் திகழ்கிறார்கள்.

அடுப்படியே தஞ்சமெனக், கிடந்தவர்களும், அடிமை விலங்கோடு அவதிப்பட்டவர்களும் காலப் போக்கில் தன் சுயம் உணரத் தொடங்கி , சுதந்திரக் காற்றை சுவாசிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

நவீன தலைமுறைப் பெண்களும் முற்போக்காகச் சிந்திக்கவும்,அதைச் செயல்படுத்தவும் தன்னம்பிக்கையின் துணையுடன், துணிந்து பயணிப்பதால், அண்டவெளியிலும், ஆழ்கடலிலும் அதிசயிக்கத் தக்கவகையில் அதிரடியாக சாதிப்பதைக் காண்கிறோம். இது அவர்களின் மன உறுதிக்குக் கிடைத்த மாபெரும் பரிசாகும்.

ஆக்கமும் அழிவும் பெண்கள் கையிலென ஒரு சாரார் சொல்வதில் உண்மைகள் இல்லாமல் இல்லை. நல்லவைகளை உருவாக்கி, தீயவகைகளை அழிப்பவள் உலகின் சக்தியென போற்றப்படுகிறாள்.அத்தகைய பெண் பெருமைக் குரியவளே!

மகளிர் அனைவரும் இரும்புப் பெண்மணிகளாக, இவ்வுலகின் கண்களாகத் திகழ வேண்டும். இனிவரும் காலங்களிலும் மங்கையர்கள் சக்தியாகத் துலங்கி, திரும்பும் திசையெல்லாம் வெற்றிவாகை சூடவும் ,இமயமளவு உயர்ந்தாலும், தலைக்கனமின்றி பக்குவமாய் பாதம் பதிக்கவும் இதயபூர்வமான நல் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

– சித்தி வ.ஃபிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவெல்லாம் நீதானே..!

நீ பிடித்து உருவமிட்ட
நித்திரையின் கணங்களில்
குடியமர்த்துகிறாய்
கனவுகளாய்...

உனக்காய்
உனக்குமட்டுமேயான
இரவு தரித்த எனக்கு
எப்படியும் குளிரப் போவதில்லை
இரவு

எப்போதாவது சிரித்துவிடும்
என்னையும் பிடிப்பதில்லையேன்
உனக்கு

விழிகளின்
இருமருங்கிலமர்ந்து
மொத்துமும் உருவுமென்
கண்ணீரின்
ஏதோ சில துளிகளும்




என்னுள் உறைந்தே கிடக்கும்
அதோ... அந்த
விடியலின் கரைகளில்

எப்படியோ
நினைவுப் பரிபூரணங்களால்
என்னுள் இருக்கை சமைத்த
உன் கதி
பாத மோட்சப் பிரயாசையில்
நின் எல்லைகள்தேடினேன்

அருவனே..!
அன்பின் சுவடுறைந்த
சொப்பனத்
தெரு வானெங்கிலும்
பூத்திருந்தாய் விண்மீனின்
பிரதி கொண்டே..!

-ச. ஜெயலட்சுமி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் வசமானேன்



வானம் ,மேகம் ,பூமி ,
இடையே நா(ன்)ங்கள் ,
இடி முழக்கம் என் காதிற்கு
கேட்கவில்லை
மின்னல் அது என் பார்வையில்
படவேயில்லை
அவளின் கல கல சிரிப்பிலும்,
முத்து பல் வெண்மையிலும்,
அவள் கடைக்கண் பார்வையிலும்
என்னையே மறக்கச் செய்ததை யார்
அறிவார் .
ஓ இதுதான் காதலா

**யுவர் சாய்ஸ் அலி**
தமிழ்நாடு

## கவிதையின் பெருமை

கவிதையை ஓவியமாக வரைய
சில வினாடிகள் போதும்...
அந்த கவிதையை பல
மடங்காக்க ஓவியனிடம்
கேட்டுப் பார் அக் கவிதையின் பெருமை
அவன் சொல்வான்...



கவிதை எழுதும் பொழுது
உன் சோகங்களை வைத்து எழுது. கவிதையின் வரிகள்
இன்னும் இனிக்கும்
அந்த சோகங்கள் உன்னை விட்டு விலகும்...

கவிதையை கவிதையாக மட்டும் பார்க்காதே.
ஓர் கலை அம்சமாகப் பார்
கவிதையின் சிறப்பை
நீ அறிவாய்.

அந்த கவிதையை பார்க்கும் ஒவ்வொரு நொடிப் பொழுதும்
உன் மனம் உள் நோக்கிக் கவனிக்கும்....
கவிதையின் ஆழத்தைப்
புரிந்து கொள்வாய்..!

**அப்ஸரா**
பாணந்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசலை படர்ந்தது

-ராம்க்ருஷ்

இருபது மாதங்களுக்குப் பிறகு நான் என்னுடைய தோழி, என்னை வழிநடத்தியவள், மிக அன்பானவள் சங்கவியைப் பார்க்கப் போகிறேன்

என்னும் நினைவிலேயே எனது குதூகலம் கொப்பளிக்கத் தொடங்கியது. சென்னையிலிருக்கும் என் சங்கவியோடானநட்பு குழந்தைப்பருவம் முதலானது என்பதே இதில் சிறப்பு. 2 வருடங்களுக்கு முன் எனது திருமணம் நடந்தது. எனது கணவர் மாதேஷ் பெங்களூருவில் பணியிலிருந்ததால் நானும் அங்கு வாழ்வைத் தொடங்க வேண்டி செல்ல வேண்டியிருந்தது. எனது திருமண வாழ்வு இன்பமானது என்ற போதிலும் என் இன்னுயிர்த் தோழியைப் பிரிந்து செல்வது தான் எனக்கு துயரமாயிருந்தது. எல்லோரும் புகுந்த வீட்டிற்குப் புறப்படும் போது அம்மா அப்பாவைக் கட்டிக் கொண்டு தான் அழுவார்கள். ஆனால் நான் என் தோழியைக் கட்டிக் கொண்டு அழுதேன். அதுவே அப்போது பேசு பொருளாக இருந்தது.

பெங்களூருவிலிருந்தும் சில காலம் டெல்லிக்கும் செல்ல வேண்டிய சூழலில் அவளிடம் பேசத் தான் முடிந்தது. நான் கருவுற்றிருந்ததால் எனது அம்மா டெல்லி வந்து என்னைப் பார்த்துக் கொண்டார்கள். இன்னும் சில இடைவிடாப் பணிகளால் நான் அவளிடம் அதிகம் தொடர்பு கொள்ள முடியாமல் போயிருந்தது. சென்ற மாதம் தான் நாங்கள் மறுபடியும் பெங்களூருவுக்கு மாறுதலில் வந்தோம். இன்று தான் நான் சென்னைக்கு பயணப் படுகிறேன்.

எனது கணவருக்கு அவருடைய அலுவலகப் பணி இருந்ததால் என்னை என் தோழியின் வீட்டில் இறக்கி விட்டு அவர் அலுவலகம் செல்வதாயிருந்தார்.

சங்கவிக்கும் ஒரு வருடம் முன்பு, நான் பத்து மாத கர்ப்பமாயிருந்த போது திருமணம் நடைபெற்று விட்டது. அவள் எனக்கு அவளது கணவரின் போட்டோ மற்றும் எல்லாத் தகவல்களையும் சொல்லியிருந்தாள். எனவே நான் அவர்களை சந்திக்கும் ஆவலில் அவர்கள் வீட்டை அடைந்தபோது என் குழந்தையுடன் அவளைப் பார்க்கும் ஆவலில் ஓடினேன். உள்ளேயிருந்து ஒரு ஒல்லியான பெண் என்னைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

திகைத்து நின்ற நான் அவள் முகம் பார்க்காமலேயே எங்கே சங்கவி அவளைக் கூப்பிடு என்றேன்.

என்னடி ராகவி என்னிடமே என்னைக் கூப்பிடச் சொல்கிறாய். நல்ல கூத்து தான் போ

ஐயோ என்னடி இது நீ ராகவியா, எங்கே உன் சதை பூசிய அளவான அழகு தேகம். என்னா யிற்று? ஏனடி இப்படி மெலிந்து விட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேள்விகளை அடுக்கினேன். ஆமாம் உனது கணவர் அலுவலகம் போயிருக்கிறாரா?

தோழிகள் இருவரும் பேசுங்கள். நான் அலுவலகம் போய் வருகிறேன். ஈவ்னிங் வந்து எல்லோரிடமும் பேசுகிறேன் என்று கிளம்பினார்.

அண்ணா, பிரேக் பாஸ்ட் சாப்பிடாமல் செல்கிறீர்களே. சற்று அமருங்கள் கொண்டு வருகிறேன். என்று உள்ளே ஓடினாள் சங்கவி.

இல்லையம்மா, நேரமாகிவிட்டது. நான் அங்கே சாப்பிட்டுக் கொள்கிறேன். இரவு உணவு இங்கே தானம்மா வருகிறேன் எனச் சொல்லிவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பிப் போனார்.

எனக்கு அவரை வழியனுப்பக் கூடத் தோன்ற வில்லை. நான் என் தோழியின் இளைப்பை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவள் உடலைப் பேணுவதை யும் உடம்பைத் திட்டமாக அழகாக வைத்துக் கொள்வதையும் அருகிருந்து பார்த்தவளல்லவா நான்.

என்னடி சுரத்தில்லாமல் ஆகி விட்டாய். பேயைப் பார்த்தவளைப் போல் என்னைப் பார்க்கிறாயே. குழந்தையை என்னிடம் கொடு. போய் குளித்து விட்டு வா. நாம் டிபன் சாப்பிடுவோம். உனக்காகத் தான் நானும் சாப்பிடாமலிருக்கிறேன். குழந்தைக்கு இட்லி ஊட்டி விடுகிறேன் அதற்குள் வா என்று என்னிடம் புதிய துண்டு ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்து என்னை குளியலறைக்கு அனுப்பினாள்.

நானும் சொன்னதைக் கேட்கும் ரோபோ போல குளியலறை சென்று குளித்து உடுத்தி வந்தேன்.

குழந்தை ஒரு இட்லி தான் சாப்பிட்டான். போதுமா அவனுக்கு என்றாள்.

போதும். நான் அவனுக்கு இன்னும் பால் கொடுக்கிறேன். அதற்குத் தான் காத்திருப்பான் எனச்

## காதல் சொல்ல வந்தேன்

கண்டாங்கி சேலைய
கட்டிக்கிட்டு
காட்டுவழி போறவளே
கருத்த மச்சான்
ஒத்தையில நிக்கேன்
காதல் சொல்ல
காத்துக் கெடக்கேன்
வாதம் பண்ணாம கேட்டுக்கடி...

கொண்டையில பூ வச்சு
கொல்லையில நீ நடந்தா
கொக்கரக்கோ சேவலா
பின்னால வருவேனடி...

கூடையில பூ பறிச்சு
கோடியில நீ வந்தா
கொடியழகி உனக்காக
ஓடி வருவேனடி...

சேத்துல கால் வச்சு
நாத்த நீ நட்டா
ஊத்து தண்ணியா
சுத்தி வருவேனடி...

வாழ்க்கையில எந்துணையா
வஞ்சி நீ வந்தா
கடைசி வரைக்கும்
கண் கலங்காம
கட்டிக் காப்பேனடி...

**- பாக்யபாரதி**
தகடூர், தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அவனுக்கு அதைக் கொடுத்து ஆசுவாசப்படுத்தி உறங்கச் செய்து படுக்க வைத்து விட்டு அவளருகே வந்தேன்.

என்ன சங்கவி எங்கே உன் கணவர்? சென்னையில் தானே பணி செய்கிறார் என்றேன்.

இல்லை ராகவி, அவர் இப்போது லண்டனில் இருக்கிறார். ஒரு வருடம் பெக்கேஜாகப் பணிபுரிய அவர்களுடைய அலுவலகம் இவரை லண்டனுக்கு அனுப்பி விட்டது.

எப்போது போனார்?

அவர் போய் 1 வருடம் ஆகப் போகிறது. அடுத்த வாரம் அவர் மீண்டும் சென்னை திரும்புவார்.

நீ இளைத்ததற்கான காரணம் அது தானா?

சரி, நீ டிபன் சாப்பிடடி. பிறகு பேசுவோம்.

ஆமாம் டிபன் சாப்பிட மட்டும் தான் வந்தேனா? எனது உயிர்த் தோழியிடம் பேசவும் கொஞ்சவும் தானே வந்தேன்.

உன்னைக் கொஞ்சத் தான் உன் கணவர் இருக்கிறாரே. இப்போது நான் எதற்கு?

என்னடி இப்படிச் சொல்லி விட்டாய். என்றும் நீ என் அன்புக்குரியவள் தான். ஆமாம் நீ சாப்பிடுவதில்லையா அல்லது உடம்பைப் பார்த்துக் கொள்வதில்லையா? நம் குழுவிலேயே நீ கட்டு செட்டானவள் ஆயிற்றே.

எல்லாம் சரி தான். எனது கணவர் என்மீது கொண்ட அன்பும் காதலும் என்னை அவர்பால் திருப்பியதடி. அவர் இங்கே இருக்கும் போது எங்கள் வாழ்வு ஒரு சொர்க்கமாகத் தானடி இருந்தது. அவர் என்னை ஒரு பூவைப் போல் தாங்குவார். அவருடைய அன்பைச் சொல்லிப் புரிய வைக்க முடியாத ராகவி.

சரி, அதற்கென்ன, அவர் பணி நிமித்தம் தானே லண்டன் சென்றார். ஸ்கைப்பில் பேசலாமே.

---



# இறந்தாலும் வாழ்வாய்..!!

- காத்தூர்க்கனி

இறக்கத்தான் பிறந்தாய்..!
அதுவரை சாதனையோடு
போராடு..!!
மண்ணில் வீழ்ந்தாலும்
விருட்சமாவாய்..!

காலநிலை கணக்கில்லை..
பாதைகள் தடையில்லை..
முடியும் வரைப் போராடு..
முயற்சியுடன் முன்னேறு..!

கல்விக்காய் கண் திறந்திடு..
கருணை உள்ளத்தால் கவர்ந்திடு..!

பெருமைக்கு முற்றுப்புள்ளி வைத்து
வறுமைக்கு கரம் கொடுத்திடு..!

புன்னகைப் பூ கொடுத்திடு..!
மனித குலத்தை தன்னோடு
அணைத்திடு..!!

இறந்தாலும் வாழ்வாய்..
நன் மக்களின் உள்ளத்தில்,
உயிர்க் கொடியாய்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசலாம், பார்க்கலாம், ஆனால் தொட முடியாதே. அந்தத் தொடும் இன்பம் இல்லாமல் சங்க கால தலைவிகளைப் போல் என்னுடல் பசலை படர்ந்ததடி. உண்ண முடியவில்லை, உறக்கம் சரியில்லை.

அதனால் தான் இந்த மெலிவு, என்னுடல் பொலிவு இழந் திருப்பது எனக்கும் தான் தெரிகிறது. அவரும்கூட மிகவும் வருத்தம் அடைந்துள்ளார் தான். என்ன செய்ய.?

சரி. அடுத்த வாரம் அவர் வந்து விடுவார் தானே. அதற்குப் பிறகு பழைய உடம்போடு நான் சங்கவியைப் பார்க்க வேண்டும். சரியா

சரி நான் மதிய உணவு தயாரிக்கிறேன் என அவள் கிளம்பினாள்.

மதியம் உணவருந்தி எங்களின் பழைய கதைகளை மீண்டும் அசை போட்டுக் கொண்டிருந்தோம். இடையிடையே குழந்தையின் விளையாட்டிலும் சிரித்தோம். மாலை மயங்கி இரவும் வந்தது.

எங்கே உன் கணவர் இன்னும் காணலியே, பாவம் அவர் டிபன்கூட சாப்பிடாமல் சென்று விட்டாரே

அவருடைய கம்பெனியில் அதெல்லாம்நன்றாகத்தான்தருவார்கள்.

கவலை வேண்டாம் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே காலிங் மணியோசை காதை நிறைத்தது.

வேகமாய்ச் சென்று நான் கதவைத் திறந்தேன். என் கணவர் நின்றிருந்தார், அவருக்குப் பின்னே ஒரு உருவமும் நின்றிருந்தது.

என்னது இது இவர் வேறு யாரையோ அழைத்து வந்துள்ளாரே என நான் திகைத்தேன்.

ராகவியைக் கூப்பிடு என்றார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த ராகவியும் விரைந்து அங்கே வந்தாள். அங்கே அவள் காண்பது என்ன கனவா? அல்லது உண்மை நிலையா மாதேசுக்குப்

# காலச் சக்கரம்

அனுபவங்களின் அரிச்சுவடியில்
கற்றவைகள்
வாழ்வியலின் முகவரியாக...

முற்றுப்புள்ளியை ஏற்றுக்கொள்ள
இயலாத நினைவுகளின் சரடுகளை
அறுத்தெறிவது எங்ஙனம்?

இருப்புக் கொள்ளாமல் எதையோ
எழுதிக் கசக்கி எறிந்து...
மீண்டுமாக எடுத்து நீவி வாசித்து

ஆறத் துவங்கியக் காயங்களைக் கீறித்
துளிர்த்து நிற்கும் குருதியை
உறிஞ்சத் துடிக்கும் மனப்பிசாசை
அடக்குவது எவ்விதம்?

நெஞ்சின் அடிவாரச் சுனையிலிருந்து
பொங்கிடும் தைரிய ஊற்றினாலும்
தீர்க்கவியலாமல்
தத்தளித்துத் தவிக்கும்
ஞாபகச் சுவடுகளின் இரணங்களில்
உருகிடும் உயிரின் வலியை
நீக்குவது எங்ஙனம்?

சூத்திரம் தாண்டிய சமன்பாடுகளும்
அடங்கிப் போகின்றன...

காலச்சக்கரத்தின்
எல்லைக் கோட்டுக்குள்

**அன்புச்செல்வி சுப்புராஜூ**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காதல் மோட்சம்

விழுந்தேனே விழுந்தேனே
  கண்ணசைவில் விழுந்தேனே
கன்னக் குழிச்
  சிரிப்பில் எழுந்தேனே

கட்டிக் காத்த
  கட்டுப்பாடு களைந்தேனே
தென்றலாய் வந்தாய்
  புயலாய் சென்றேனே

மழையாய் சிரித்தாய்
  நிலமாய் குளிர்ந்தேனே
ஏங்கிய தளிராய்
  உன்னுள் வளர்ந்தேனே

தேடிச் சென்றாய்
  ஓடி வந்தேனே
தேகம் சூடேற
  முத்தம் தந்தேனே

திகட்டாத தேனமுதாய்
  தித்திக்க வைத்தேனே
செந்தேனே செந்தேனே
  சம்மதம் தந்தேனே

நிலவாய் மிளிர்ந்தாய்
  இருளாய் அகன்றேனே
காதல் கொண்டாய்
  மோட்சம் அடைந்தேனே!

**- பிரிய நிலவன் செகா**

பின்னே அவளுடைய கணவன் விவேக்கும் நின்று கொண்டிருந்தது கண்டு அவள் சற்று நேரம் பிரமை பிடித்தவள் போலானாள்.

என்ன ராகவி, உன் கணவரை நான் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். இனி இருவரும் சதை போட்டு கட்டுடல் தம்பதியாகுங்கள். அவரும் கூட இளைத்துத் தான் காணப்படுகிறார்.

ஆதர்ச தம்பதிகள் தான் நீங்கள். சந்தோஷமே உங்களை மாற்றி விடும். ராகவிக்கு தன் தோழியின் இளைப்பின் கவலையும் தீர்ந்து விடும் நான் என் கணவரிடம் சொன்னேன்,

ஆமாம், சங்கவி தன் கணவர் அடுத்த வாரம் தான் வருவார் என்றாளே. எப்படி உங்களுக்கு இந்த விஷயம் தெரியும் என்றேன்.

விவேக் என்னிடம் முன்பே தந்தி மூலம் இன்று வருவதாகவும், சர்ப்ரைசாக இருக்கட்டும் என்றும் சொல்லியதால் தான் நானும் அலுவலக வேலையாக வருவ தாகக் கூறி உன்னை இங்கே அழைத்து வந்தேன். இப்போது உனக்கும் உன் தோழிக்கும் சந்தோஷம் தானே

ஆமாம் அண்ணா, மிகுந்த சந்தோஷம். நாங்கள் தான் தோழிகள் என்றால் நீங்களும் தோழர்களானது மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. வாருங்கள் எல்லோரும் இரவு உணவு உண்போம். என தன் கணவரின் கை பிடித்து அழைத்துச் சென்றாள் ராகவி. அவளின் சந்தோஷ முகமே சொல்லியது இனி அவளும் அவள் கணவரும் பழைய உடலோடும் அன்போடும் வாழ்வார்கள் என்பதை.. எனது கணவரின் அன்பும் என்னை வியப்பிற்குள்ளாக்கியது. நாங்கள் பேறு பெற்றவர்கள் என்ற மகிழ்ச்சி என்னை நிறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்கு நன்றி மடல்

## நேசமுடன் ஈசு

வானத்திலிருந்து கீழ்நோக்கிப் பெய்யும் மழையால் தான் உலகத்தில் உள்ள உயிர்கள் மேல் நோக்கி வளர்கிறது. இயற்கையை மனிதர்கள் அழித்தபோது பொறுத்து பொறுத்து பார்த்த இயற்கை, மனிதர்களை அழிக்க வரும் இந்த கொரோனா காலகட்டத்தில் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எனும் பொன் மொழிக்கேற்ப பூமியானது எவ்வளவு நீரை நீராவியாக வானத்துக்கு அனுப்புகிறதோ அவ்வளவு மழையை பூமி பெறுகிறது. உயிரியல் வன ஆய்வாளர் மணி அவர்கள் குறிப்பிடும் பொழுது "ஒரு புலி உள்ள காடு செம்மையான சிறப்பான காடு" என்கிறார். எப்படி என அவர் மேலும் விளக்கும் போது «ஒரு காட்டில் புலி இருந்தால் அங்கு அதிகமான மான்கள் இருக்கக்கூடும், மான்கள் அதிகமாக இருந்தால் அங்கு புற்கள் அதிகமாக இருக்கும்» என்பார் மணி அவர்கள். அவரின் முடியும் இடத்திலிருந்து நான் எனது கருத்தை தொடங்குகிறேன். மரங்கள் செழிப்பாக வளர அங்கு மழையின் வாஞ்சை தேவைப்படுகிறது. ஒரு குழந்தைக்கு தாய் எவ்வாறு தலை முதல் பாதம் வரை தடவி கொடுத்து வளர்க்கிறார்களோ அது போலவே மழையும் பயிர்களை, பூக்களை, செடிகளை, மரங்களை, ஏன் உலக உயிர்களையுமே தலை முதல் தடவி வேர் வரை சென்று அவர்களின் உயிரோடு உறவாடுகிறது. மழையே உனக்கு நன்றி சொல்கிறேன்.

ஐம்பூதங்களால் ஆனது இவ்வுலகம் என்பார்கள். உலகத்தின் ஐம்பூதங்களோடு உள்ள தொடர்புக்கு நான் நன்றி நவில்கிறேன். தலைகீழாக தாங்கிப் பிடித்தாலும் நேராகவே நின்று எரியும் நெருப்பை போன்றது மழையே உன் குணம். நாம் நீரை எவ்வளவு மாசுபடுத்தனாலும் எவ்வளவு கேடு செய்தாலும் அந்த நீரானது ஆவியாகி வானத்திலிருந்து மழையாக பொழியும் போது நாம் எந்நீரை தந்தாலும் நன்னீரை மட்டுமே நல்கும் இளநீராக தரும் தென்னையைப் போல நான் உன்னை பார்க்கிறேன் மழையே. உனக்கு நன்றி.

மழை நீரின் அளவு உலகில் குறைந்து கொண்டே வருவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மழையே மனிதர்களை மன்னிப்பாயாக! மழையை நாம் புரிந்து கொள்ள அவரவர்கள் அவரவரின் குடியிருப்புகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் அளவீடுகளை எடுத்துப் பார்த்தோமானால் நன்கு புரியும். நான் வாழும் உடுமலை பகுதியானது நீர் வளமும் நில வளமும் மிக்கது. அதற்குக் காரணம் மழையே உன்னைத் ஏற்று தேக்குகின்ற திருமூர்த்தி அணை அமராவதி அணை மற்றும் பத்தாயிரம் ஏக்கர் அளவுக்கு ஏழு பெரும் குளங்களை கொண்ட எம் பகுதியில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஆழ்துளை கிணறுகளில் 100 அடியில் தண்ணீர் கிடைத்தது. இப்பொழுது எழுநூறு அடி முதல் ஆயிரம் அடி வரை சென்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீச்சியடிக்கும் தண்ணீர் இல்லை சில இடங்களில் ஈரப்பதம் கிடைக்கிறது அதன்மூலமே அன்றாட தேவைக்கான இரண்டாயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. நீர்வளம் நிலவளம் மிக்க அணைகளும் குளங்களும் எண்ணற்றவை நிரம்பிய என்னுடைய பகுதியிலேயே இந்த நிலை என்றால் வறட்சியான இடங்களைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். உடுமலையை தாண்டிய வறட்சியான பகுதிகளில் ஆயிரம் அடி நீர் தோண்டினாலும் தண்ணீர் வராமல் இருப்பதை கிராமத்து சொலவடை யாக «பணமெல்லாம் புகையா போச்சு» என்று சொல்வார்கள். இதற்கு காரணம் மழையே! ஆதலால் உனக்கு நன்றி நவில்கிறேன்.

உன் நன்றி மறந்து உன்னை சேகரிக்க மறந்ததே இந்நிலைக்கு காரணம்.

காற்றிலும் மழையே உனது பங்களிப்புக்கு நன்றி சொல்லியே ஆக வேண்டும். வறண்ட பகுதிகளில் அனல் காற்று வீசுவதும் செழிப்பான பகுதிகளில் தென்றல் தவழ்ந்து வர காரணம் உனது வருகையே! மழை நீரை நாம் பாராட்டி சீராட்டி பெற்ற பிள்ளைகளை போல் பொத்தி பொத்தி சேமித்தால் அது அனாதை இல்லங்களில் சேர்க்கும் பிள்ளைகளை போல அனாதையாக விடாமல் நம்மை செழிப்பாக பின்னாளில் காப்பாற்றும்.

ஆகாயத்தில் உன்பணிக்கும் உள்ள தொடர்புக்கும் நன்றி மழையே! வானத்தை வெறும் கண்களால் சற்று உற்றுப் பாருங்கள். என்ன தெரிகிறது எதுவும் தெரியவில்லையா? சூரியக்கதிர்கள் குடிசை வீட்டின் ஓட்டை பகுதியில் விழும் கதிரவனின் ஒளிக்கீற்றில் நம்வீட்டின் சாளரப் பகுதியில் அல்லது மரக் கிளைகளின் இலைகளுக்கு இடையில் தரை தொடும் சூரியக் கதிர்களை உற்றுப் பாருங்கள் ஒன்று புரியும். ஒளிக்கீற்றில் எண்ணற்ற தூசுகளும் வாயுக்களும் மிதப்பதை காண்கிறோம். நமது வீட்டுத் தரையை துடைக்கிறோம். வாகனங்களை கழுவு கிறோம். வீட்டுக்கு வெள்ளையடிப்பது அல்லது வண்ணம் அடிக்கிறோம். ஆனால் வானத்தின் குப்பைகள் தூசுக்கள் பறப்பதை யார் சுத்தம் செய்வார்கள். பரந்து விரிந்த அதை எவ்வளவுதான் செலவு செய்தாலும் செய்யவே முடியாத அந்தப் பணியை பத்து பைசா செலவின்றி தூய வெள்ளை காகிதமாய் வானத்தை மாற்றுவது மழையே நீ தான் உனக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி.

நிலப் பகுதிகளில் நீ செய்யும் செயல்களுக்கு நன்றி. இருபது வருடங் களுக்கு முன்னால் கிணற்று பாசனமும் நீர்வளமும் இல்லாமலே தென்னை விவசாயம் செழித்து இருந்தது. எங்கும் தமிழகத்தின் தேவைக்காக மட்டுமின்றி பிற மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதாக இருந்தது. மழையே உனது பங்களிப்புதான். தங்கத்தில் கூண்டு ஆனாலும் அதில் தங்குவது கிளியின் முடிவுதான் என்பது போல நம் நட்பு வளர்க்கும் செடிகளுக்கு நாம் சுத்திகரிப்பு தண்ணீர் சத்துக்கள் மிகுந்த தண்ணீர் செயற்கை உரங்கள் என ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் மழை நீரைப் போல ஊட்டச் சத்துக்களை உயிரின் தன்மையை ஒரு தாயின் நேசத்தை நம்மால் தர இயலாது. ஏனென்றால் அதுதான் மழை. அதுவே மழை.

முகிலினங்கள் அலைகிறதே முக வரிகள் தொலைந்தனவோ முகவரி கள் தொலைந்ததனால் அழுதிடுமோ அது மழையோ?! என்ற வைரமுத்துவின் வரிகளுக்கு இன்று வலிகளும் அதிகம். முகிலினங்கள் அலைகிறதே நாம் தொலைத்த நீர்நிலைகளின் முகவரி களைத்தேடி அழுது அழுது கண்ணீர் வற்றி மழை இப்போது காணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது. நாம் நீர் நிலைகளை எல்லாம் கானல் நீராக்கி சென்னையில் உள்ள ஏரிகளில் எல்லாம் நெல் நடவு செய்த இடத்தில் கல் நடவு செய்யப்பட்டது. ஏரிகள் எல்லாம் ஏரியாக் கள் ஆனது. தொலைந்த தன் இடத்தை தேடி மழை ஆனந்தம் அடைந்த நேரம் நாம் அனைவரும் அழுது இருந்தோம் அங்கு கட்டிய வீடுகளின் மொட்டை மாடியில் நின்று...

## வளரச் செய்யும் வரம்

பூமி பிள்ளைக்கு
வானம் ஊட்டும் தாய்ப்பால்
வானத்தையும் பூமியையும்
சேர்த்து நெய்ய சேராமல் வரும்
ஒற்றை நூலிழைகள்

ஆகாயத்தில் இருக்கும்
அழுக்குகளை வழித்தெடுக்கும்
துப்புரவு தூயவன்

வாடும் பயிர்களுக்கு
உயிர் கொடுக்க
வானம் அனுப்பிவைக்கும்
வைர தூதுவன்

ஏழை முதல்
பணக்காரர் வரை எல்லோரும்
சமம் என
உணர்த்த வரும் உய்யவன்

வானத்திலிருந்து கீழ்நோக்கிப்
பெய்து பூமியில் உள்ள
உயிர்களை மேல்நோக்கி
வளர செய்யும் வரம்

***

நாம் மழையின் நன்றியை
மறப்பதற்கு சாட்டையடியாய்

## வரம் தந்தால்

வானம் பார்த்த பூமியாய்
வறண்டு இருந்தபோது
வரம் தா என்கிறீர்கள்

மாபெரும் மழையாக மாறி
உங்கள் விசனம்
தீர்க்க வெள்ளமாக வந்து
வேண்டும் வரம் தந்தால்
கறுப்புக்கொடி (குடை)
காட்டுகிறீர்கள்

கால்வாய்களில்
கலக்க விட்டு பின்
கவலைப்படுகிறீர்கள்

வாய்க்கால்களில் வழியவிட்டு பின்
வாய் பிளக்கிறீர்கள்

சாக்கடைகளில் சறுக்கவிட்டு பின்
சலித்துக் கொள்கிறீர்கள்

சேமிக்கும் வழிகளை எல்லாம்
சேதாரப் படுத்திவிட்டு
கடைசியாக வீணாக
கடலில் கலக்க விடுகிறீர்கள்

ஆண்டுகள் சில ஆன பின்பு
வறட்சி தலை விரித்தபோது
மீண்டும் வானம் வெறித்து
வரம் தா என்கிறீர்கள்

***

வானத்திலிருந்து நம்மை காக்க வரும்
வெள்ளைதுளி தேவதைகளை
வரவேற்போம். கறுப்புக்(கொடி)
குடை பிடிக்காமல்..

மழையே மானுடத்தின்
பிழைபொறுத்து மன்னித்துவிடு.
மண்டியிட்டு நான்
நவில்கிறேன் உனக்கு நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலத்தின் சக்தி

## நிலாப் பெண்

''மாதராய் பிறப்பதற்கு நல்ல, மா தவம் செய்திட வேண்டுமம்மா''

இந்த பூமியின் சுழற்சிக்கு பெண் என்கிற அச்சாணி இல்லையென்றால், அதன் சுழற்சி எப்போதோ நின்று போயிருக்கும். பெண் இல்லையேல் இவ்வையகம் இல்லை.

இந்தப் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அசைவிலும், பெண்ணின் ஆதிக்கம், பெண்ணின் பிரதிபலிப்பு, பெண்ணின் சக்தி, ஆற்றல் என்பன பரந்து விரிந்து காணப்படுகிறது. இயற்கையின் மாபெரும் அருட்கொடையும் அவளே.

ஒவ்வொரு வெற்றிகரமான ஆணினதும் முதுகெலும்பாக நிற்பவள் ஒரு பெண் தான். ஒரு தாயாகவோ, தாரமாகவோ, சகோதரியாகவோ, தோழியாகவோ, அல்லது காதலி யாகவோ, ஏதோ ஒருவகையில்... ஆணின் உந்து சக்தியாக உடனி ருப்பவள் அவளே.

பெண்ணின் ஆற்றல்களைப் போன்றே அவளது அர்ப்பணிப்புகளும் அளப்பரியது. குடும்ப உறவுகளுக்காக, சமுதாயத்திற்காக... தன்னலமற்ற தியாகம் புரிவதில், அவளுக்கு நிகர் அவளே.

அப்பேர்ப்பட்ட பெண்ணை ,நீங்கள் தலையில் வைத்து கொண்டாட வேண்டியதில்லை. தரையில் போட்டு மிதிக்காமல் இருந்தாலே போதும்.

பல நூறாண்டுகளுக்கு முன் ,பெண் குழந்தை பிறந்தாலே ..அதை ஒரு சாபமாகக் கருதினார்கள். பெண் சிசுக்கள் உயிரோடு புதைக்கப்பட்ட வரலாறுகள் கூட இருக்கிறது.

பிறந்த சிசுக்களுக்கு கள்ளிப் பால் ஊட்டப்பட்டு கொல்லப்பட்டன. பெண் குழந்தை பிறக்கப்போவதை அறிந்தால், அதை கருவில் வைத்தே அழித்தார்கள்.

அன்று தொட்டே பெண்களுக் கெதிரான வன்முறைகள்... கட்ட விழ்த்து விடப்பட்டிருந்தன. கால மாற்றங்கள், சட்டவிதிமுறைகள் போன்றவற்றால், அந்நிலையில் சற்று தளர்வு ஏற்பட்டது. அடுத்து வந்த காலங்களில் பெண்களை ஒரு அடிமையாக, ஒரு வரையறைக்குள் வைத்து, அடக்குமுறைகளால் அவர் கள் ஆட்படுத்தப்பட்டார்கள். கணவனை இழந்த கைம்பெண்கள் ,அவர் களது கணவனின் சிதையில், தானும் தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொள்ளும் கொடூரமான நடைமுறை வழக்கங்களும் காணப்பட்டது. விதவைகள், சமுதாயத்தின் பார்வை யில், ஒரு இழிவான பிறவியாய் பார்க்கப் பட்டார்கள். அவர்கள் எந்தவொரு வைபவங்களிலும் பங்கெடுக்கக் கூடா தென தடைகளும் விதிக்கப் பட்டன. அடுப்பங்கரை கூட தாண்டத் தைரியமற்ற பெண் சமூகம், அந்த நான்கு சுவர்களுக்குள் தங்களது வாழ்க்கையை வரையறுத்துக் கொண்டது.

ஆனால், காலப்போக்கில் அத்தனை தடைகளையும் தாண்டி, பெண்கள் வெளியே வரத் தொடங்கி... கல்வி, தொழில், விளையாட்டு, மருத்துவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளி என பலதரப்பட்ட துறைகளில் ,தங்கள் ஆற்றல்களை, திறமைகளை வெளிப்படுத்தி, பற்பல சாதனைகளை படைத்துக்கொண்டிருக்கிறார்கள். வரவேற்கத்தக்க மாற்றங்கள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீன யுகத்தில் பெண் ஒரு சிறப்பான அங்கம் வகிக்கின்றாள் என்பதை எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. பெண் எப்போதும் ஆளுமையுடையவள். அடிமையல்ல.

பிறப்பு முதல் இறப்பு வரையிலான காலகட்டத்தில் பெண்ணின் பரிமாணங்கள், கதாபாத்திரங்கள் மெய் சிலிர்க்க வைக்கின்றன.

ஒவ்வொரு பருவத்திலும், காலகட்டத்திலும், அவள் தன் குடும்பத்துக்காகவும், சமுதாயத்திற்காகவும் செய்யக்கூடிய சேவைகள் அர்ப்பணிப்பானது. அளப்பரியது. தன்னலமற்ற சேவை மனப்பான்மையை, சுயநலமற்ற தூய அன்பை ஒரு பெண் அல்லாத, வேறு எந்த ஒரு ஜீவராசியாலும் இன்னொருவருக்கு அளிக்க முடியாது. பெண் ஒரு மகா சக்தி. ஒரு சிறு உதாரணத்திற்கு, ஒரு நாளின் பல மணித்தியாலங்களில், ஒரு பெண் செய்யக்கூடிய சேவைகள், கடமைகள் தான் எத்தனை..எத்தனை...?

பலதரப்பட்ட பணியாட்களைக் கொண்டு செய்விக்கப்பட வேண்டிய பற்பல பணிகளை அவள் ஒருத்தியே, தனி ஆளாக நின்று செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் அவளுக்கு மட்டும் உரியது. அதொரு அற்புதமான அர்ப்பணிப்பு இல்லையா...?

பின் தூங்கி, முன் எழுந்து ஒவ்வொரு மணித்துளிகளையும், தன் குடும்பக் கடமைகளுக்காக இன்முகத்துடன் நிறைவேற்றுவதில் அவளுக்கு நிகர் யார் உள்ளார்? அதிலும் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி. அதிகபட்ச சலுகைகள் எதுவுமின்றி...

பெண்ணின் மனம் மென்மையானது. அதுவே மேன்மையானதும் கூட... உடலளவில் பலவீனமாக கருதப்படும் பெண், உள்ளத்தளவில் மிக மிக வலிமையானவள். யாரொருவரும் தாங்க முடியாத வலிகளை தாங்கக் கூடிய தைரியம் நிறைந்தவள் பெண். அதற்கான சான்றே 'தாய்மை' ஒரு உயிரை உலகிற்கு கொண்டு வர அவள் கொடுக்கும் உயரிய விலை தான் ,தாங்கொண்ணா வலிகளை தாங்கிக் கொள்ளும் தாத்பரியம்.

மன உறுதியிலும் சரி வைராக்கியத்திலும் சரி.. அவளை வெல்ல யாருமில்லை. அதேநேரம்.. சூழ்நிலைக்கு ஏற்ப, வளைந்து கொடுத்தும், அனுசரித்தும், பொறுமையைக் கை யாண்டும் வாழக் கூடிய அற்புத ஆற்றலும் அவளுக்குரியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆவதும் பெண்ணாலே. அழி வதும் பெண்ணாலே» என்றொரு வார்த்தை, பயன்பாட்டில் உள்ளது. அதன் உண்மையான அர்த்தம் உணரப் படாமல் பெண்ணை சாடு வதற்காக அவ்வார்த்தையை உபயோகிக்கிறார்கள்.

ஆனால்.. அதன் உண்மை யான அர்த்தம் என்ன தெரியுமா...? ‘‘நல்லன ஆவதும் பெண்ணாலே. தீயன அழிவதும் பெண்ணாலே’’ என்பதே. ஒளியேற்ற தீபமேந்தும் பெண், தீமையை அழிக்கத் தீப்பந்த மும் ஏந்துவாள்.

பறக்கவே முடியாத பறவை யினம் கோழி. ஆனால், பருந்து தன் குஞ்சுகளை குறிவைக்கும் போது, அதுவே பல அடிகள் மேலே பறந்து தன் குஞ்சுகளை காப்பாற்ற போராடுகிறது. அதே போல, தன்னைச் சார்ந்தவர்களுக்கு ஒரு துன்பம் நேரும் போது மென்மையான பெண்மை, வன்மையாகவும் மாறுகிறது.

தான் பட்டினியில் கிடந்து, பசித்தவருக்கு உணவளிக்கும் இரக்க குணம் பெண்ணுக்கே உரியது. புயலடித்தாலும், இடியே இறங்கி னாலும், புன்னகையுடன கடந்து செல்லக்கூடிய ஆற்றல் அவளின் தனித்துவம். தன் குழந்தையை ஒரு எறும்பு தீண்டினாலும், உயிர் துடிக்கும் வலியை உணரக் கூடிய அன்பான ஆத்மா அவளே.

இந்த அண்ட சராசரமெங்கும் அங்கம் வகித்திருப்பது பெண்ணின் ஆற்றல்களே. அவள் போற்றப்பட வேண்டியவள் அல்லவா?

இன்பத்தையும, துன்பத் தையும் ஒரு துளி கண்ணீரால் காட்டக் கூடியவள், பெண் மட்டுமே.

கண்ணீர் அவளது ஆயுதமல்ல. சில சூழ்நிலைகளில்,அவளது தன்மானம் தகர்க்கப்படும் போதும், அவள் நிராகரிக்கப்படும் போதும்.. அவளது இயலாமையின் வெளிப்பாடாக கண்ணீரே உள்ளது.

இன்றும் கூட சில குடும் பங்களில், பெண் பிள்ளைகளை பாகு பாடோடு வளர்க்கிறார்கள். ஆண் பிள்ளைகளுக்கு வழங்கப் படும் சலுகைகள், சுதந்திரம் போன்றன பெண் பிள்ளைகளுக்கு மறுக்கப்படுகின்றது. பெண், இன்னொரு வீட்டில் வாழப்போகிறவள் தானே என்றொரு அலட்சியப் போக்கால்.. அவள் உணர்வுகள் மட்டுமன்றி, உரிமை களும் மறுக்கப்படுகின்றது.

இது முற்றிலும் கண்டிக்கத் தக்க செயல்பாடு. ஆணுக்கு பெண் எந்தவகையிலும் சளைத்தவளல்ல.

ஆணுக்குப் பெண் சரி நிகரானவள். அதைக் கருத்தில் கொண்டு இரு பாலாருக்கும் சரிசம மான சலுகைகள் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

பல குடும்பங்களில், குடும்பச் சுமைகளை, ஒரு சுமைதாங்கியாய் தாங்கிக் கொண்டிருப்பது, பெண் பிள்ளைகளே என்பது மறுக்க முடியாத, ஆணித்தரமான உண்மை.

எந்த ஒரு வீட்டில் பெண் மதிக்கப்படுகிறாளோ..

அங்கு ,அன்பும், ஆனந்தமும், சௌபாக்கியங்களும், பொங்கிப் பிரவகிக்கின்றன.

எந்த ஒரு பெண்ணின் உணர்வுகள், சிதைக்கப்படாமல்... மதிக் கப் படுகிறதோ.. அங்கு நல்லதொரு சமுதாயம் தழைத்தோங்கும்.

பெண் எப்போதும் போற்றப் பட வேண்டியவள்.

மகத்தான மகளிர்தனை வருடத் தில் ஒரு முறை கொண்டா டாமல், வாழ்நாள் முழுவதும் கொண்டாடுவோம்.

மகத்தான மங்கையர் அனை வருக்கும் மகளிர் தின வாழ்த்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டுத் தோட்டம் செய்வோம்

வீட்டைச் சுற்றி இருக்கும் இடத்திலும், அடுக்கு மாடிகளின் பல்கனிகளிலும் (தொட்டிகளில்) அழகாக தோட்டம் அமைத்துக் காய்கறிகள், பழங்கள் பயிரிடலாம். எம் நேரத்தையும் மிகவும் பயனுள்ள வழியில் செலவு செய்யலாம். மா, பலா, வாழை, மரவள்ளி, சர்க்கரை வள்ளி, பூசணி ஈரப்பலா, குடப்புளி, துரியன், ஏலம், பாதாம், கறுவா போன்றவை கூட தொட்டி களில் வெற்றிகரமாகப் பயிரிடலாம் என்ற உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

எம் தோட்டத்தில் விளையும் பயிர்கள், எம் அன்றாடத் தேவைக்காகப் பயன் படுத்தக் கூடியதாக இருக்கும். அதுவும், இரசாயனக் கலவையற்ற காய்கறிகளை விளைவிப்பதன் மூலம் நோய்களில் இருந்தும் பாது காப்புப் பெறலாம். தேவைக்கேற்ப அவ்வப்போது எந்தவித கலப்படமோ அன்றி பல பக்கவிளைவுகளையோ ஏற்படுத்தாத புத்தம் புது காய்கறி, பழங்களைப் பறித்து உணவுக்குப் பயன்படுத்துகையில் அதன் சுவையே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிதான். சத்துகளும் வீணாகாமல் எமக்குக் கிடைக்க கூடியதாக இருக்கும்.

நம் தேவை போக மீதமிருப் பதை அயலவர்க்கும் கொடுத்து உதவலாம். அல்லது விற்று சிறு வருமானம் ஈட்டலாம்.

வீட்டின் சமையலறையில் சேரும் காய்கறி மற்றும் பழக்கழிவு களைக் கொண்டு சேதனப் பசளை தயாரித்து உரமிடலாம். அதிலிருந்தே பூச்சி கொல்லிகளையும் தயாரிக்கலாம். துரித பலன்தரக்கூடிய மரங்களை தொட்டியிலும் வளர்க்க முடியும். வருடம் முழுவதும் பலன் தரக்கூடிய எலு மிச்சையை போன் றவைகளைத் தொட்டியில் வைத்து வளர்க்க முடியும். மேலும், மல்லித்தழை, இஞ்சி, புதினா, துளசி, ரோஸ்மேரி, பூண்டு, வெங்காயம், பச்சை மிளகாய், குடை மிளகாய், கீரை வகைகள் மற்றும் சமையலுக்கும் நோய்களுக்கு கைமருந்தாக வும் பயன்படக் கூடிய மூலிகைகள் எனச் சிறிய இடத்திலேயே மிக அருமையாக வளர்த்துப் பயன் பெறலாம்.

தொட்டியில் பயிரிட எளிய முறைகள் பலவுண்டு. முதலில் ஒரு செடி வளர்க்க மிக முக்கியமானவை எவையெனப் பார்ப்போம்

1. ஏற்ற தொட்டிகளைத் தேர்வு செய்தல் (சூரிய ஒளியை ஈர்த் தெடுக்கக் கூடிய கறுப்புத் தொட்டிகளைத் தேர்வு செய்தல் சிறப்பு)
2. மண் (மரத்துக்கேற்ப கலக்கும் மண் வகை, அளவு என்பன வித்தியாசப் படும்)
3. மரம்,செடி,கொடிகளை சூழலுக்கு ஏற்றவாறு பயிற்றுவித்தல் (ஒரு செடியை பிடுங்கி நடுகையில், அல்லது மரக்கிளையை வெட்டி நடுகையில் நேரடியாக வெயில் படாமல் கொஞ்ச நாட்கள் பாதுகாத்தல் அவசியம். இதுபோல் நீர், உரம் என்பனவும் காலநேர மறிந்தே பயன்படுத்தல் அவசியம்.இன்னுமொரு முக்கியமான விடயமாவது இடைவெளி விட்டு மரம் செடிகளின் கிளைகள், இலை களை வெட்டி அகற்றி, அவற்றின் அடர்த்தியைக் குறைத்தல் அவசியம். அப்போது தான் அவை புதிதாகக் கிளைகள் விட்டுத்துளிர்க்க ஆரம்பித்து பூக்கவும் காய்க்கவும் செய்யும்) இவை போன்றவை தான் தாவரங்களைப் பயிற்றுவித்தல் எனப்படும்.
4. சூரிய ஒளி
5. உரம்
6. அளவான நீர்

இவைகளை மனதிற் கொண்டு சரியான முறையில் செயலாற்றி னால், சிறப்பான பலனைப் பெறலாம்.

அமிலத் தன்மையான தக்காளி, எலுமிச்சை போன்ற இன்னோ ரன்ன பழங்களின் விதைகளாகட்டும் அல்லது மிளகாய் போன்ற காரத்தன்மையுடைய விதைகளா கட்டும் அவற்றை 24-48 மணி நேரம் உப்பு நீரில் ஊறவைத்து பிறகு நீரில் அலசி நீர் உறிஞ்சக்கூடிய ஒரு தாளில் வைத்து கொஞ்சம் காய்ந்த பின்பு ஒரு சிறு தொட்டியில் தும்பு கலந்த சற்று ஈரலிப்பான மண்ணை முக்கால் பாகம் நிறைத்து விதைகளைத் தூவி, அதற்கு மேலாக கற்களற்ற லேசாக அரிக்கப்பட்ட மண்ணைத் தூவ வேண்டும். (அப்போதுதான் விதைகள் தடையின்றி முளை விடக் கூடியதாக இருக்கும்)பிறகு சிறிதளவு நீர் தெளித்து ஒரு கறுப்பு பொலிதீன் போட்டு மூடி, ஒரு ரப்பர் பான்டை உபயோகித்து தொட்டியைச் சுற்றி கட்டி விடவேண்டும். பின்பு வெயில் படாத வெளிச்சமான இடத்தில் வைத்து விட்டால் போதும். இரு வாரங்களுக்குள் முளை விட்டுத் துளிர்க்க ஆரம்பிக்கும். பிறகு பொலி தீனை அப்புறப் படுத்தலாம். பின் மெதுவாக தனித்தனியாகவோ, இவ்விரண் டாகவோ பிரித்து தனி தொட்டிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுதல் அவசியம்.

எப்போதுமே சின்னஞ்சிறு தொட்டிகளிலேயே மர நடுகையை ஆரம்பிக்க வேண்டும். சிறு தொட்டி களில் மரத்து வேர்களின் நெருக்கம் அதிகமாக, சீக்கிரமே பூத்துப் பலன் தர ஆரம்பிக்கும். எடுத்த எடுப்பிலேயே பெரிய தொட்டிகளில் வைக்கும் மரங்கள் இலகுவில் பலன் தராது போகலாம். பூத்துக் காய்க்க ஆரம்பித்த பின் ஒரு வருடத்திலேயே கொஞ்சம் பெரிய தொட்டிக்கு மாற்றிவிட வேண்டும்.

இரு வாரங்களுக்கொரு முறை பசளையிடுதல் அவசியமாகும். மரம் செடிகளின் வகைக்கேற்ப பசளை யிடும் காலம் மாறுபடலாம்.

வெட்டிய 10 வாழைப்பழங் களின் தோல், பொடி செய்த 5 முட்டைக்கோதுகள், 10 கிராம் நெத்தலிக் கருவாட்டுக் கழிவு (பொடி செய்து கொள்ள வேண்டும்) சேர்த்து அரை லிட்டர் நீரில் கலந்து 3 நாட்கள் மூடி வைத்து பிறகு ஒன்றரை லிட்டர் நீர் கலக்க வேண்டும். அதில் பாதியை வடி கட்டி ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் நீர் கலந்து தெளிப்பானிலிட்டு இலை களின் அடிப்பாகம், கிளைகள், தண்டுப் பகுதிக்கு தெளிக்கலாம்.மற்ற பகுதிக் கலவையை வேர்களுக்கு ஊற்றலாம்.

மிக முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது, இந்த பசளை வெயிற்காலங்களில் தான் பயன் படுத்த வேண்டும். இதைப் போட்ட பின் மழை வந்தால், மரத்துக்கு தேவையான போஷாக்கு கிடைக்காமற் போகலாம். காலை 8-11 க்கும் இடைப்பட்ட நேரமே இவற்றைத் தெளித்தல், நீர் விடுதல் போன்றவைக்கான சிறப்பான நேரமாகும். அக்காலத்தில் தான் தாவரங்கள் தமக்குத் தேவையான போஷாக்கை உறிஞ்சிக் கொள்ளும் தருணமாகும்.



இப்பசளையை இடுவதன் மூலம் பூக்காத, காய்க்காத மரங்கள் பூப்பதையும் காய்ப்பதையும் காணலாம். இப்பசளை, தாவரங்களில் பூத்த பூக்கள் உதிராமல் நீண்ட நேரம் காக்கும்.

இது போன்ற இன்னும் நுணுக்க மான பயன்தரும் பல விடயங் களை, இனி வரும் இதழ்களில் பார்க்கலாம்.


- தமிழ் நிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இவன்” நூல் மதிப்புரை

கோவுஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதனின் நான்காவது படைப்பான ‘இவன்’, ஒரு சாமானியனின் சரிதத்துள் தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலையும் கலந்து படைத்த ஒரு காவியம். இதில் ஆரம்ப முதல் இறுதிவரை எம்மையும் வழிநடத்திச் சென்றது மட்டுமல்லாது, அத்தனை சம்பவங்களையும் எம் கண்முன் காட்சிகளாய் விரிய வைத்த இவரின் அழகிய சொல்லோவியங்கள், நூலுக்கு மேலதிக சிறப்புச் சேர்த்தன எனலாம்.




‘தேயிலை தேசத்தின்
கலைமகன்-இந்த
தேசத்தைப் போற்றும்
தமிழ்மகன்
சாயலில் நிகரில்லாக்
கவிமகன்-எந்த
சங்கத்திலும் சாரா
தனிமகன்’ என

ஆரம்பிக்கும் இவரது சரிதம் மலையக மக்கள் பட்ட இன்னல்கள் மட்டுமல்லாமல், சிறுபான்மையினர் அனுபவித்த சொல்லொணாக் கொடுமைகளை சொல்லாமல் சொல்லிப் போக, மனதை ஏதோ ஒரு சுமை அழுத்திப் போகிறது.

‘என்னதான் படித்தாலும் அந்நாளில்
ஏற்ற தொழில் தமிழர்க்கு இல்லை’

‘தோட்டங்கள் ஆனது அரசுடமை
தொழிலாளர்கள் ஆனார்
பொதுவுடமை
ஆட்டம் கண்டது வாழ்வுரிமை
அழிவின் ஆரம்பம் இது உண்மை ‘

தேயிலைக் காணிகளைப் பிரித்து
தேசத்து மக்களுக்குப் பங்கிட்டார்
கோயிலைக் கூட மாற்றிவிட்டு
கும்பிடு வேறிடம் போய் என்றார்’

என்று உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டும் நூலாசிரியர் சொல்லும் கவிகளுக்குள், தமிழரின் துன்ப வரலாறு புதைந்து கிடப்பதைக் காணலாம்.

பெற்றவர்,உற்றவர் துணை வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியமென்பதை

‘பெற்றவரின்
நிழலிருத்தலே இங்கு
பேரின்பம் பெறும்
வழியாகும்
உற்றவரின்
துணையிருப்பின்
உலக வாழ்க்கை
சுகமாகும்’

என்ற வரிகள் பறைசாற்றி, இளம் சமுதாயத்துக்கும் பாடம் புகட்டுகின்றன.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் உயிரான உறவுகளை ஒட்டுமொத்தமாய் பிரித்த வரலாறை

‘வேரூன்றிய நிலத்தை விட்டு-வேற்று
ஊர் மண் சென்று
பேருக்கு புனர்வாழ்வென்று
பெயர்த்து நட்டார் உறவுகளை’

என்று பிரிவின் சோகத்தை மொழி பெயர்க்குமிடம் சிறப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எழுபத்து ஏழாம் ஆண்டில்
வைகாசித் திங்கள் தனிலே
வலுவுடன் வந்ததோர் அரசியல்
மாற்றம்
அதிலும் வஞ்சிக்கப் பட்டது நம்
கூட்டம்'

'ஆட்சிமாற்றம் காண அடித்தளமிட்ட
நம் மக்கள் மீட்சிக்குக் காத்திருக்க,
இங்கு மிருகவெறி கொண்டோர்
செய்தனர் வன்முறைகள்'
எப்படியெல்லாம் தமிழ் மக்கள்
வஞ்சிக்கப் பட்டனர் என அவரின்
மனக்குமுறல்களை வார்த்தைகளில்
கொட்டியிருக்க, வாசிப்போர் மனமும்
பதைபதைக்கவே செய்கிறது.

அன்புச்சங்கிலியால் கட்டுண்டவரின்
வாழ்க்கைச் சோலையில்,
ஆங்காங்கே மகிழ்ச்சிப்பூக்களும்
வனப்பு சேர்த்திருப்பதைக் காணக்
கூடியதாக உள்ளது.

'மலையகத்தில் பிறந்த இவன்
மனம் வாழும் கலையகத்தில்
பழமைக்கும் புதுமைக்குமிடையில்
இடையில்
பாலமிட்டே தினம் கடக்கின்றான்'

'காதலும் இவன் வாழ்வில் கடந்து
போனதுண்டு
ஒரு களங்கமில்லாமல் நகர்ந்து
போனதுண்டு'

'சாதலும் ஓரிரு தடவை சந்திக்க
வந்ததுண்டு
பாவமிவன் சாதிக்கட்டும்
என்றெண்ணி
சந்தர்ப்பம் கொடுத்ததன்று'
என மரணத்தை வென்று
விடாமுயற்சியுடன் தான் சாதித்த
கதை பகிர்கிறார்.

பன்முகமாய் சிந்திக்கும் இவரின்
மனம் மக்களுக்காக,நாட்டுக்காக
என்று பொதுநலமாயும் சிந்திக்கிறது.
'சுதந்திர பொருளாதாரமெனும்
சுருக்குக்குள் விழுந்தது நாடு
விதந்துரைத்தால் அதுதான் கேடு
உள்ளூர் விளைச்சலுக்கும் ஊறு'

'இன,மத,மொழி பேதம்
வளர்ப்பதே சிலருக்கு வேலை
கனமிகு இதயத்தோடு
இவன் கலங்காத நாட்கள் இல்லை '
என்று தன் மனதின் ஆதங்கத்தை
பகர்கிறார்.

இவரின் எழுத்துக்களுக்கு நீண்ட
நாட்களாக அங்கீகாரம் கிடைக்காத
கதை சொல்கிறார்,
'காலங்கள் கடந்து போச்சு
இவன் கவிதைகளுக்கு இல்லை
மூச்சு' என.

ஓரிடத்தில் அழகிய நட்பை '
முப்பரிமாணத்துடன் முகிழ்த்தது
நட்பு' என விவரிக்கும் விதமோ
கொள்ளை அழகு!

'இரயில் கடந்த பாதையிலே
துயர் சுமந்த தேயிலைகள்
உயிரூட்டி உரமூட்டி தமை வளர்த்த
உறவுகளின் பிரிவில் வைத்தன
ஒப்பாரி' எனும் வரிகள்
மலையக மக்களுக்கும் தேயிலைச்
செடிகளுக்குமுள்ள பந்தத்தை
எடுத்துக் காட்டுகின்றன.

இந்தியா செல்லும் சொந்தங்களை
வழியனுப்ப வந்தவர் விட்ட
கண்ணீரை
'முன்னோர்கள் பலபேர்கள்
கண்பிழிந்த நீர்த்துளிகள் சேர்ந்தே
இந்நாளில் கடல்நீரில்
இவ்வளவு உப்போ என இவன்
நினைத்தான்' என்கிறார். யாரும்
நினைத்திராத வித்தியாசமான ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கு இதுவென்றே சொல்லலாம்.

தமிழர் அடக்கியொடுக்கப் பட்ட
வலிகளை பல வரிகள் தந்து,
மனதைக் கனமாக்கி,ரணமாக்கிச்
செல்ல நம் மக்களின் ரத்தம்
உறிஞ்சும் வரலாறுகள்,நாட்டின்
கறுப்புச் சரித்திரமாயின.
'வரண்டுதான் ஓடியது
நாட்டில் சமாதான நதியும்...'
'சமாதானம் பேசிக்கொண்டே
சண்டையிட்டு அமைதியிழந்து
அமாவாசையில் நிலவைத் தேடி
அலைவதே வழக்கமாச்சு' என்ற
உண்மை சுட்டது.

கவிஞர்கள், எழுத்தாளர்களின்
படைப்புகளில் புனைவுதான்
அதிகம் இருக்கும். இவரின்
வரலாறைச் சொன்ன எழுதுகோலோ
உண்'மை'யைத்தான் அள்ளித்
தெளித்திருக்கிறது.

இவரின் சரிதம் சுமந்து வந்தவை
வரிகளல்ல நம் தேசத்தமிழர்களின்
வலிகளே!

பெற்றோருக்கு நல்மகனாய், மலையக
மக்களின் நலம் விரும்பியாய் திகழும்
நூலாசிரியரின் எழுத்துக்கள்
தமிழ் மக்களின் பிரதிநிதியாகத்
தேசமெங்கும் பேசும்.

தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கைப்
போராட்டத்தை,
ஒரு சாமானியனின் சரிதம் மூலம்
சொன்ன 'இவன்' சரித்திரம்
படைப்பான்.

(தமிழ்நெஞ்சம் வடிவமைப்பில்
வெளியான இந்நூல் இலங்கை ரூபா
250 க்கு கிடைக்கிறது)
தேவையானவர்கள் தொடர்பு
கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி:
கோவுஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதன்,
வெற்றிலைக்கொடி தோட்ட இல்லம்,
கோவுஸ்ஸ, எல்ல - இலங்கை.
தொலைபேசி எண் : 0776264891

- வஃபீரா வஃபி

## என்ன. விலை அழகே..?

என்
ஹார்மோன்களில்
ஹார்மோனியம் இசைக்கும்
ஸெல்லுலாய்ட் சிற்பமே..!

செங்காந்தள் மலரே...!!
தேவகானமே...!!

பூமியில் இருக்கும்
எதிலும்
புதுமையில்லை.

ஆதலால்...
பரிசளிக்கப் பொருத்தமில்லை
என்று கருதுகிறேன்.

நட்சத்திரம் ஒன்றின் விலை
என்னவென்று
கேட்டுச் சொல்வாயா....

அந்த
ஆகாயத் தேவதையிடம்....

என்
வாசலில் படிந்திருக்கும்

உன்
சித்திர நிழலுக்குப்
பரிசளிக்க. வேண்டும்



**ஜென்ஸி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையல் சொல் கேளேல்

மையல் தேகம் வேண்டாம் என்றனள்
தையல் பேதை வேண்டி நின்றனள்
முதுமை வேண்டிப் பெற்ற மூதாட்டி
முற்றும் அறிந்த மூத்த ஞானியள்

முன்னவள் சொன்னது முற்றிலும் மெய்யே
பின்னவன் சொன்ன வள்ளுவ வாக்கே
பெண்ணவள் அவ்வை மொழியிலே வந்ததே
சொன்னவை அத்தனையும் சொக்கனின் ஆணையே

லீலைகள் புரிபவன் விரிசடையன் மனையாளின்
வீணாசையில் வீழ்ந்தது தட்சணின் இழப்பே
பேராசை பெண்ணின் வடிவாய் கைகேயி
பேரரசன் உயிரைப் பெயர்த்தெ டுத்ததுவே

கற்புக்கரசிகள் பலரால் பாரதம் திகழ
கற்ற மூதாதையரைத் தவறாய் பகருவாளோ?
பற்றற்ற பெருந்தகை உரைத்தனள் தையலை
தகாதச் செயலும் சொல்லும் உடையாளை

எப்பொருளும் மெய்யுணர்வை ஆய்ந்தே உதிர்க்கட்டும்
அப்பொருளே எம்மூதாட்டி அவ்வை ப் பகர
அப்பொருளை உணர்ந்தே முண்டாசுக் கவியின்
செவ்வாக்கு அமைந்ததே தவிர மாறானதல்ல

சூதான மனங்கொண்ட பெண்மை வேண்டேல்
சூழ்நிலை உணர்ந்து தவிப்பாய் உதவும்
சூடிய மங்கை உயர்த்தியே கருத்தைப்
பதித்திட சிந்தனைத் துளியை விதைத்தான்

பகுத்திடும் ஞானத்தின் மூலச் சக்தியே
பகர்ந்திட்டேன் உணராய் மடநெஞ்சே மானிடப்
பதரே இச்சிந்தனை ஏற்பாய் நேர்மறை
பக்குவ நிலைதனை உரைக்கும் மெய்யுணரவே

**இரா.விஜயகல்யாணி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் வைரஸ்

ஒரு முறை இந்நோய் இருவரை தாக்கும்
உருவாக முன்பே உயிர்வரை பூக்கும்.
கருவாகி பின்னே காதல் என்று பிறக்கும்
பெருவாரி இன்பம் பரிசாய் அது அளிக்கும்.
விடுமுறை இன்றியே வேதனை கூட்டும்
வெறும்வயிறதையும் பசியின்றி காட்டும்.
குணங்குறி காட்டும் உணர்வதை தாக்கும்
அணங்கெதிர்ப்பட்டால் அங்கேயே நிற்கும்
தினமதன் தீவிரம் கூடியே காட்டும் -அது
மனமதின் ஈரமும் மறையவே வாட்டும்.
கண்ணால் பரவும் கதை பேச்சு சுருக்கும்
இதயம் வரைக்கும் இதன் தாக்கம் இருக்கும்.
காத்திருக்கையிலே கால்களும் வலிக்கும்
பார்த்திருக்கையிலேயே பார்வையும் பறிக்கும்
பார்த்திருப்போரையும் அது தன்வசம் ஆக்கும்
பாரிலோர் கூட்டத்தை தன் சிஷ்யராய் சேர்க்கும்
இருட்டில் திருட்டாய் அது உயிரை அருட்டும்
இரு இதயம் திரட்டும் அதை முதலில் மிரட்டும்
இமைகள் திறக்கும் அதன்வழி இதயம் பறக்கும்
விழிவழி நுழையும் விதிவரை அலையும்
முடிவது புரிந்தும் முழுவதும் இனிக்கும்
இதுதான் வாழ்க்கை என அது காட்டும்
இருவரை இயக்கியே ஒரு படம் ஓட்டும்
ஒருவரி வாழ்க்கையை ஒருயுகம் ஆக்கும்
உடன்பிறந்தோரையும் புதுமுகம் ஆக்கும்.
உணர்ந்திடமுன்பே உயிர்வரை தாக்கும்
உணர்ந்திடமுடியா பயிரிலும் பூக்கும்
விருந்ததை அருந்த முடியாது வருந்தும்
விரும்பியே மனதும் திரும்பவும் பொருந்தும்
சித்த மருத்துவமும் செயலிழக்கும் -இங்கு
முத்த மருத்துவமே குணப்படுத்தும்
திருந்தவே வழிதேடி இருந்தது மூளை
திரும்பவும் காதல் காட்டிடும் வேலை
அது தன்னை நிலைநிறுத்தி அறிவிக்கும்
இவ்விதமாய்
காதல் வென்றிட முடியா வியாதியடா
காலம் சொல்லிடமுடியா ஆதியடா.

**- பிரகவி**
**(ஆர்.ஜே.பிரகலாதன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்தல் இனிது

நிஷா ரஹ்மான்



வட்டம் போட்டு வாழ்வதா வாழ்க்கை? இல்லை. திட்டம் போட்டு வாழ்வதே வாழ்க்கை. நம்மில் பலரும், எதற்கெடுத்தாலும் "நேரமில்லை" என்ற வார்த்தைகளைக் கொண்டு, தங்களது இயலாமையை அல்லது முயலாமையை மறைத்துக் கொள்கிறார்கள்.

வாழ்வில் போனால் திரும்ப வராத ஒருசிலவற்றில், நேரம் என்பது இன்றியமையாதது. நேரமுகாமைத்துவம் என்றால் என்னவென்று அறிந்து, அதன் படி செயல்படுவது, நேரமில்லை என்னும் வார்த்தையை தவிர்த்திட உதவும்.

காரணம், எல்லாவற்றையும் மிக அழகாக திட்டமிட்டு சரியான முறையில் செயல்படுத்துவதென்பது, உங்கள் நேரத்தை பயனுள்ளதாக செலவு செய்யவும், மிச்சப்படுத்தவும் உதவு கிறது. இன்றைக்கெல்லாம் பார்த் தால், பலர் காலையில் எழுந்து, இன்று என்ன செய்வது என யோசித்தும், புலம்பியும், தங்களது நேரத்தை வீணடிக்கிறார்கள். அவை திரும்பப்பெற முடியாத பொன் னான நிமிடங்கள் என்பதை மறந்து.

வெற்றியாளர் எவரும், அன்றா டம் எழுந்து ,அன்றைய வேலை களைப் பற்றி யோசிப்பதில்லை. ஏனெனில், அவர்கள் தங்களுக்குரிய கடமைகளை/ வேலை களை முன்கூட்டியே திட்டமிட்டு விடுகிறார்கள். கிட்டத் தட்ட ஒரு வருடத்திற்குரிய திட்டங்கள், வருட ஆரம் பத்திலேயே அவர்களால் அழகான முறையில் திட்ட மிட்டு வைக்கப்படுகிறது. அதன் போக்கில் தினமும் அவர்கள், தங்களது காரியங்களை திறம் படவும், வெற்றிகரமாகவும், செயல் படுத்திக் கொண்டிருக்கி றார்கள்.

அதனால், அவர்கள் வாழ்வில் ஒரு நொடியேனும் வீணடிக்கப் படுவ தில்லை.

இன்னும் சொல்லப்போனால், நேரத்தை மிச்சப்படுத்தித் தங்களுக்கு சந்தோஷம் தரக்கூடிய ஏதேனும் ஒரு விளையாட்டிலோ,பொழுதுபோக்கிலோ கூட ஈடுபடுகிறார்கள்.

தங்களது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுகிறார்கள்.

நேரமுகாமைத்துவத்தின் அவசியம் உணர்ந்து, திட்டமிட்டு செயல் படுவதால், எப்போதும் முன் னேற்றப் பாதையில் வெற்றிகரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடை போடுகிறார்கள்.

ஆம். நேரமுகாமைத்துவம் என்றால் என்ன?

ஒரு நாளின் இருபத்து நான்கு மணிநேரத்தில், நீங்கள் உறக்கத் திற்காக கிட்டடத்தட்ட, ஐந்து முதல் எட்டு மணித்தியாலங்களை செலவிடுகி றீர்கள். மீதியுள்ள நேரங்களில், எதை யெல்லாம் செய்ய வேண்டும் என்பதைப் பட்டிய லிடுங்கள்.

நீங்கள் தொழில் வல்லுநர் களாக இல்லாத பட்சத்தில், ஒரு மாதத்திற்குரிய, (அ) ஒரு வாரத் திற்குரிய வேலைகளைத் திட்ட மிடுங்கள்.

வார இறுதியில் ஒரு ஞாயிற்றுக் கிழமை ஒரு குறிப்பேட்டில், திங்கள் தொடங்கி அடுத்த ஞாயிறு வரை யிலான வேலைகளை குறித்துக் கொள்ளுங்கள்.

மிக முக்கியமாக செய்து முடிக்க வேண்டியவற்றை முதலிடத் தில் குறித்துக் கொள்ளுங்கள்.

அடுத்தடுத்து, நீங்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள், போக வேண்டிய இடங்கள், சந்திக்க வேண்டிய நபர்கள் என ஒவ்வொன்றாகப் பட்டிய லிடுங்கள்.

மிகத் தெளிவாக திட்டங்களை அட்டவணைப் படுத்துங்கள்.

ஆரம்பத்தில் இது சற்று சிரம மாகத் தோன்றினாலும், நாளடைவில் அதன் பயன்பாடு உங்களுக்கு ஆச்சரி யம் ஏற்படுத்தும்.

உங்கள் கால அட்டவணை, உங்களுக்கென்று, சில மணித்தியா லங்களை மிச்சப்படுத்தி தரும்.

அதுமட்டுமல்ல. நீங்கள் தினமும் என்ன செய்வது, எப்படி செய் வது, எதை முதலில் செய்வது போன்ற குழப்பங்களை உங்களுக்கு ஏற்படுத்தாது.

வாழ்க்கை மிக அழகான முறையில், அமைதியாகச் செல்லும் அதன் போக்கில். அந்த மாற்றத்தை நீங்களே உணருலீர்கள்.

நேரமுகாமைத்துவத்தின் அடுத்த முக்கியமான பகுதி எது வெனில், அதிகாலையில் எழுந்து கொள்வது,

நீங்கள் ஏதாவது ஒரு தொழில் துறையில் இருப்பீர்கள். குறிப்பிட்ட நேரத்துக்குள் அலுவலகம் செல்பவராக, அல்லது சுயதொழில் செய்பவராக, ஒரு மாணவராக, இல்லத் தரசியாக இருக்கக் கூடும். நீங்கள் யாராக இருந்தாலும், அதிகாலை யில் எழுந்து கொள்வதை வழக்க மாக்கிக் கொள்ளுங்கள்.

அதிகாலையில் எழுந்து கொள் வது பலருக்கும் முடியாத, அல்லது பிடிக்காத ஒரு செயலாக, இருக்கக் கூடும். ஆனாலும் முயற்சித்து அந்த பழக்கத்தை உங்கள் வாழ்வில் கொண்டு வந்து பாருங்கள். அதனால் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகிறது என்று. உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் நல்ல பல மாற்றங்கள் ஏற்படும். பழக்கப்படாத ஒருவருக்குத் திடீரென அதிகாலையில் எழுவதென்பது சிரமமாக இருக்கும். அதற்கு ஒரு வழி இருக்கிறது. நீங்கள் வழமையாக எழுந்து கொள்ளும் நேரத்தை விட பதினைந்து நிமிடங்கள் முன்கூட்டி அலாரம் வைத்து எழலாம். தினமும பதினைந்து நிமிடங்களாக எழும் நேரத்தை அதிகரித்து வாருங்கள். சில நாட்களில் மிக சுலபமாக அதி காலையில் எழுந்து கொள்ள முடியும், இறுதியாக நாலரை மணிக்கு எழும் பழக்கத்தை, வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

அதற்காக அலாரம் கூட அவசிய மில்லை. மனப் பயிற்சியின் மூலம், அப்பழக்கத்தினை வழமைக்குக் கொண்டுவர முடியும்.

மனப் பயிற்சி என்பது நீங்கள் தினமும் உறங்கச் செல்லும் போது, குறிப்பிட்ட இந்நேரத்தில் எழ வேண்டும் என்று உங்களுக்குள்ளேயே திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்வதால், ஒரு கட்டளை போல், அந்தச் செய்தி உங்கள் ஆழ் மனதிற்குள் சென்று பதிந்து போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது.

உங்கள் ஆழ் மனமானது அதை உள் வாங்கி, நீங்கள் எழுந்து விட நினைக்கும் நேரத்தில், அதற்குரிய சமிக்ஞையைக் கொடுத்து விடும் .நீங்கள் எவ்வளவு உறக்க நிலையில் இருந்தாலும், ஆழ்மனதின் சமிக்ஞை உங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும். அலாரத்தை நிறுத்தி விட்டு உறக்கத்தை தொடர்ந்தாலும், ஆழ் மனதின் சமிக்ஞை உங்களை உறக்கத்திலிருந்து விடுவித்து விடும்.

அதிகாலையில் எழுந்து கொள்வது என்பது அற்புதமான ஒரு வரம். அன்றைய நாளை ,அழகாக மாற்றும் சக்தி அங்கிருந்தே ஆரம்ப மாகிறது.

உலகின் அத்தனை நேர்மறை சக்திகளும் அமைதியாகப் பரவும் அவ்வேளை தான் பிரம்ம முகூர்த்தம் என சொல்லப்படும் மகத்தான நேரமாக கருதப்படுகிறது.

குளிர்மை நிறைந்த சூழலும், இதமான இயற்கை காற்றும், மலர்களின் நறுமணமும், செடி கொடிகளின் மெல்லிய அசைவுகளும், புள்ளினங்களின் பூபாளமும், மெல்லப் பரவும்

வெளிச்சமும், தங்கத்தில் குளித்த கதிரவனின் பொற்கிரணங்களும், ஒரு மனிதனுக்கு எத்தகைய புத்துணர்ச்சி அளிக்கிறது என அளவிட்டு சொல்லி விட முடியாது.

ஒரு நாளுக்குரிய தெளிவான, நேர்மறையான ஆரம்பம் அது தான். முயற்சி செய்து அந்த சுகானுபவத்தை அடைந்து பாருங்கள்.

நீங்கள் அதிகாலையில் என்ன மனநிலையை அடைகிறீர்களோ.. அதுவே உங்கள் முழு நாளையும் தீர்மானிக்கிறது. நீங்கள், தாமதமாக உறங்கி, தாமதமாக கண்விழிப்பதால், காலைக் கடன்களை முடிப்பது தொடங்கி. உணவு உண்பது, உடை மாற்றுவது, போக்குவரத்து, அலுவல், கடமைகள், என எல்லாவற்றிலும் ஒரு அசமந்தப் போக்கை

# பிழைக்க வைக்கும் நினைவுகள்

தென்றலாய் வருடும்
உன் நினைவுகளில்....
கரைந்து ஓடுகிறேன்...!

மூச்சுவிட
மறந்தும் போகிறேன்!

மலர்மொட்டுகளும்
இதழ்விரித்து.......
கேள்விக்கணை தொடுக்க..

நீ கொடுக்கிறாய்...!
கன்னம் சிவக்க...!!!
இதழ் பூவாய் விரிய....
ரீங்காரவண்டோ...
இதழில் அமர.....
உயிர்க்கின்றேன்..!!

தினம் உன்னால்....
இப்படித்தான்....
செத்துச் செத்துப்
பிழைக்கிறேனடா!

**முனைவர்**
**கிருஷ்ண திலகா**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வசீகரமானவளே

செம்மொழியில் சொல்லெடுத்து
கருவிழியில் மையெடுத்து,

நான் தீட்டிய
பொய் வரிகளுக்கும்
மெய் முலாமிட்டு
முகவரி தந்தவள்...

பல்வேறு நோக்கங்களுக்காக
என் கவிதையாளினியை
பிரம்மன் அவன்

படைத்திட்ட போதிலும்...
அவளை நோக்குவதற்காகவே
என்னையும் படைத்திருக்கிறான்

வடிவானவளின் வசீகரத்தில்
அசடு வழிந்து

திகைத்து நின்ற
எழிலான தருணங்களையும்

தன் முந்தானையோரத்தில்
ஒத்தியெடுத்த ஒப்பற்ற
தங்கம் அவள்.

வல்லமை வாய்ந்த
வித்தகி அவளின்

வாய்மையான தாய்மை
மனதிற்கு முன்னே

வாலிபன் இவனோ
நித்தமும் குழந்தையாகிறான்

**கவிரசிகன் அப்துல் நாசர்**
மலேசியா

உணருவீர்கள். உடல் சோர்வு ,மனச் சோர்வுஇரண்டுமேஉங்கள்காரியங்களை செய்து முடிக்கத் தடைக்கல்லாக மாறும். ஒரு தெளிவற்ற நிலையில், எதிர் மறையான மனப்போக்குடன் அன்றைய நாளைக் கழிக்க வேண்டியிருக்கும்.

உங்கள் உள்ளத்து உணர்வு களின் வெளிப்பாடு, செயல் பாடாக மாறி, உங்களது உந்து சக்தியை/ ஆற்றலை / செயல்திறனைக் குறைத்து விடும்.

காரணமற்ற கோபம், மன உளைச்சல், சுய பச்சாதாபம் போன்றவை ,தாமதமாக எழுவதன் முக்கிய காரணியாக காணப்படுகிறது.

திட்டமிடுதல் அட்டவணை யில், அதிகாலை எழுவது முதல், இரவு உறங்கச் செல்லும் வரை தெளிவாக பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். அதை செயல்படுத்தத் தவறாதீர்கள்.

தாமதமாக உறங்கச் செல்வ தும், தாமதமாக எழுவதும் உங்களை அறியாமலே, உங்களுக்குள் மன அழுத்தத்தைத் தோற்றுவித்து விடும்.

அதுவே நாளடைவில் பலவித மான நோய்களுக்கு வித்திட்டு விடும்.

ஒரு சிறு பிழையான பழக்க வழக்கம், உங்கள் வாழ்வில் நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்தும்.

எல்லோரும் விரும்புவது..நிம்மதி யான, சந்தோஷமான, ஆரோக்கியமான வாழ்க்கையைத், தான் விரும்பினால் கிடைத்து விட அது கடையில் வாங்கும் பொருள் இல்லையே?

உங்கள் முயற்சியும், பயிற்சி யும் தான் மிக முக்கியம்.

உங்கள் வாழ்க்கை, உங்களது கையில். யாரோ ஒருவரின் திட்டமிடுதலில் நீங்கள் வாழவில்லை. நீங்கள் தான் உங்கள் வாழ்வின் வடிவமைப் பாளர்.

காலம் வேகமாக கடந்து போய்க் கொண்டிருக்கிறது. நொடிகள் நிமிடங்களாகி, நிமிடங்கள் மணித்தியா லங்களாய் மாறி, மணித்தி யாலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களாகநகர்ந்து,நாட்கள்வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாக பரிணமித்து, மாதங்கள் வருடங்களாக உருண்டோடிக் கொண்டி ருக்கின்றன. வாழ்க்கை ஓட்டத் திற்கு ஈடு கொடுக்க முடியாமல் ,பலர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

சரியான திட்டமிடுதல், நேர முகா மைத்துவம், கால அட்டவணை எதுவுமின்றி ஓடிக் கொண்டே இருப்ப தால் என்ன பயன்? இறுதியில் திரும்பிப் பார்த்தால், எதுவுமே இருக்காது.

அன்பு, பாசம், நிம்மதி, சந்தோஷம், ஆரோக்கியம் என எதுவு மில்லாத ஒரு வெறுமைச் சூழலில், அறிவு ஞானம் பெறுவதில் என்ன லாபம்? கடந்தவைகளும், இழந்தவை களும் மீளப் பெற முடியாதவை என்பது அப்போது உணரப்படும் .

நேரத்தை அழகாகத் திட்ட மிட்டு செலவு செய்து, சரியான வழிமுறையில் வாழ்ந்தால்., வாழ்வே சொர்க்கம் .

கடிகாரத்தை கண்டுபிடிக்க முன்னரே முன்னோர்கள் நேரத்தைத் திட்டமிட்டு வாழ்ந்தார்கள்.

இயற்கையின் தோற்றத்தை, மாற்றத்தை வைத்து காலத்தைக் கணித்தார்கள்.

மூவேளை உணவு,அதிகாலை இறைவழிபாடு, இரு வேளைக் குளி யல், காலை மாலை பிரார்த்தனை, முன்னிரவு உறக்கம், அதிகாலைத் துயில் எழுதல் எனஅழகானஅமைப்பில்வாழ்ந்தார்கள். சுறுசுறுப்பு, உடல் உழைப்பு, சத்தான இயற்கை உணவுகள், சுத்தமான காற்று, போதியளவு ஓய்வு, ஆழ்ந்த உறக்கம் இவைகளால் நோயற்று ஆரோக்கியத் தோடு நூறு வயது தாண்டியும் வாழ்ந்தார்கள்.

அவர்கள் காட்டித் தந்த வழி முறைகள், பழக்க வழக்கங்கள், கலாச்சார விழுமியங்கள், ஒழுக்க நெறிகள், உணவுப் பழக்கங்கள், இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை இவை மீறப்பட்டு மறுக்கப்பட்டும், மறக்கப்பட்டும்மனிதன்தன்னிச்சையான போக்கில் வாழ்ந்ததன் விளைவு தான், மனிதன் அழிவுப்பாதையை நோக்கி தள்ளப்பட்டிருப்பது. விண்ணைத் தொடும் விஞ்ஞானமும், தொடுவானம் வரை தொடர்ந்து கொண்டே போகும் தொழில் நுட்பமும் வரவேற்கத்தக்கவை தான்.

என்றாலும், மனிதன் அதற்காக கொடுத்துக் கொண்டிருக்கும் விலை கொஞ்சமல்ல. ஆரோக்கியம், தூக்கம், நிம்மதி, சந்தோஷம், விலைமதிக்க முடியாத பொன்னான நேரம் இவற்றை இழந்து தான் அவற்றை அடைந்து கொண்டிருக்கிறான்.

வாழ்க்கையை முழுவதுமாக வாழ விரும்புகிறீர்களா? அப்படி யானால் நேரத்தைத் திட்டமிட்டு மிக மிக அழகாக, அற்புதமாக ஒவ்வொரு மணித்துளி களையும் செலவு செய்யுங்கள்.

ஏனென்றால் ''நேரத்தால் ஆனதே வாழ்க்கை.'' ஓடிக் கொண்டி ருப்பது கடிகாரமல்ல. "உங்கள் வாழ்க்கை"

இனிது இனிது
வாழ்தல் இனிது

நற்சிந்தனைகள் இனியும்
தொடரும்.

## நகைச்சுவை

டாக்டர் :
உங்களுக்கு
இருக்கிற வியாதி
குணமாகணும்னா நீங்க
மீனும் கோழியும் சாப்பிடறதை
நிறுத்தித்தான் ஆகணும்.

நோயாளி :
எப்படி டாக்டர் அதுங்க
சாப்பிடறதை நான் நிறுத்த
முடியும்????



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மல்லிகை' டொமினிக் ஜீவா
# 27.06.1927 – 28.01.2021

டொமினிக் ஜீவா 27.06.1927 அன்று யாழ்ப்பாணத்தில் அவிராம்பிள்ளை ஜோசப், மரியம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். அவரது தந்தை ஜோசப் யாழ்ப்பாணத்தில் சிகையலங்கார நிலையமொன்றை நடத்தி வந்தார்.

டொமினிக் ஜீவா, ஒரு படிக்காத மேதை. ஆயினும் முற்போக்குச் சிந்தனையாளர், தலை சிறந்த பத்திரிகையாளர், சிறந்த எழுத்தாளர், திறனாய்வாளர், கதாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, அனல் கக்கும் பேச்சாளர், கடின உழைப்பாளி, நவீனத் தமிழ் இலக்கியத்தின் உயிர்நாடி எனப் பன்முக ஆளுமை படைத்தவர்.

''தவிர்க்க முடியாத காரணங்களால் ஐந்தாம் வகுப்புவரை படித்தேன். அந்தக் காலத்தில் என்னை வெகுவாகப் பாதித்த ஒரு நிகழ்ச்சி, என்னுடைய இலக்கியத்துறை பிரவேசத்திற்கே காரணமாக அமைந்தது. நான் தொடக்கப்பள்ளி மாணவனாக இருந்தபோது அந்த பிஞ்சுப் பருவத்திலேயே என் படிப்பை, என் தந்தை செய்த தொழிலைக் குத்திக் காட்டிய பொழுது, என் இதயத்தில் ஏற்பட்ட காயந்தான் என் எழுத்தில் எரிகிறது'' எனத் தமது இளமைக்கால நிகழ்வு குறித்தும், இலக்கிய உலகில் பிரவேசிப்பதற்கான சூழல் குறித்தும் 'ஈழத்திலிருந்து ஒரு இலக்கியக் குரல்' என்னும் தமது நூலில் டொமினிக் ஜீவா குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்து நவீன இலக்கியத்துறையில் 1946 ஆம் ஆண்டு அடி எடுத்து வைத்தார். அதன்பிறகு தமிழகத்து கம்யூனிஸ்ட் தலைவர்களில் முக்கியமானவரான ப.ஜீவானந்தம் 1948 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை புரிந்த நேரம், டொமினிக் ஜீவா, ஜீவானந்தத்தை சந்தித்து, அவரது வழிகாட்டுதலின் அடிப்படையில் தமது அரசியல், சமூக இலக்கிய நோக்கினை சரியான திசையில் அமைத்துக் கொண்டார். அவர்மீது கொண்ட அபிமானம் காரணமாக அன்றுமுதல், தமது பெயருடன் 'ஜீவா' என்று இணைத்துக் கொண்டு 'டொமினிக் ஜீவா ' ஆனார்.

'சுதந்திரன்' இதழ் 1956 ஆம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் டொமினிக் ஜீவாவின் 'எழுத்தாளன்' என்னும் சிறுகதை முதற் பரிசைப் பெற்றது. தினகரன், ஈழகேசரி முதலிய ஈழத்து இதழ்களில் டொமினிக் ஜீவாவின் சிறுகதைகள் அதிக அளவில் வெளியிடப்பட்டன. மட்டுமன்றி தமிழகத்து இலக்கிய இதழ்களான சாந்தி, சரஸ்வதி, தாமரை ஆகிய இதழ்களிலும் இவரது சிறுகதைகளும், படைப்புகளும் வெளியாகின.

'மல்லிகை' இதழை 1966 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி வெளியிட்ட டொமினிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவா, 'மல்லிகை' இதழின் ஆசிரியராக, பதிப்பாசிரியராக, வெளியீட்டாளராக, விநியோகிப்பாளராகவும் விளங்கினார்.

'மல்லிகை' இதழின் மகுட வாக்கியம் ''ஆடுதல் பாடுதல் சித்திரம் கவியாதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவார்'' என்ற பாரதியின் வாக்காகும்.

சிகையலங்கார நிலையம் ஒன்றிலிருந்து வெளிவந்த ஒரே சஞ்சிகை மல்லிகை தான். ''இது சவரக்கடையல்ல, எனது சர்வகலாசாலை. எழுத்து எனக்குத் தொழில். பேனா சமூக மாற்றத்திற்கான வலிமைமிக்க ஆயுதம்'' என பெருமிதத்துடன் டொமினிக் ஜீவா கூறி உள்ளார்.

''எமது ஈழமண் வாசனையுடன் யதார்த்த இலக்கியம் தோன்றிய போது அதற்குத் களம் கொடுக்கச் சஞ்சிகைகள் இருக்கவில்லை. இந்தியச் சஞ்சிகைகளும் எமது இலக்கியத்தை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளாது புறக்கணித்த நிலையில், எமக்கென்று ஒரு சஞ்சிகையின் அவசியத்தை உணர்ந்து மல்லிகையைத் தோற்றுவித்தேன்''. என டொமினிக் ஜீவா தமது நேர்காணலில் கூறியுள்ளார்.



ஈழத்து இலக்கியத்தை தமிழ் இலக்கிய உலகிற்கு அளிக்கவும், அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்கான படைப்புகளை வெளியிடவும், பல்வேறு தரமான படைப்புகளையும், படைப்பாளிகளையும் தமிழுலகுக்கு அறிய வைக்கவும். புதியதொரு எழுத்துச் சந்ததியை தோற்றுவிக்கவும் நோக்கமாகக் கொண்டு மல்லிகை இதழ் வெளிவந்தது.

ஈழத்து எழுத்தாளர்களுக்காகவும், ஏனைய இலக்கியவாதிகளுக்காகவும் மல்லிகை இதழை ஆரம்பித்த டொமினிக் ஜீவா, அனைவருக்கும் களம் அமைத்துக் கொடுத்தார்.

'மல்லிகை' இதழில் சிறுகதைகள், புதுக்கவிதைகள், பல்வேறு துறைசார் கட்டுரைகள், திறனாய்வுகள், துணுக்குகள், வாதப்பிரதிவாதங்கள், நூல் மதிப்புரைகள் என ஏராளமானச் செய்திகள் இடம் பெற்றன. மேலும், ஆசிரியர் தலையங்கம், தூண்டில் பகுதியும் இதழுக்கு சிறப்புச் சேர்த்தன.

'மல்லிகை' இதழ் ஏழை விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தொண்டாற்றி வந்த அதேசமயம், சராசரி வாசகர்களை இலக்கியத் தரத்திற்கு உயர்த்தும் பணியைச் செய்து வந்தது. சாதி,மத,இன வேற்றுமை உணர்வுகளற்ற சமுதாயப் பணிகளோடு உலகளாவிய ரீதியில், உயர்ந்த நோக்கங்களை இளைஞர்களுக்கு உணர்த்தி வந்திருக்கிறது.

டொமினிக் ஜீவா தமிழிலக்கிய உலகிற்கு அளித்துள்ள நூல்கள்:

சிறுகதைத் தொகுதிகள் பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனங்கள், தண்ணீரும் கண்ணீரும் ( இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்), ஈழத்திலிருந்து ஒர் இலக்கியக் குரல் (பேட்டிகள், செய்திகள்), டொமினிக் ஜீவா சிறுகதைகள் ( 50 சிறுகதைகளின் தொகுப்பு), தலைப்பூக்கள் ( மல்லிகைத் தலையங்கங்கள்), முன்னுரைகள், சில பதிப்புரைகள், அட்டைப்பட ஓவியங்கள் (கட்டுரைத் தொகுப்பு நூல் மூன்று தொகுதிகள்), எங்களது நினைவுகளில் கைலாசபதி ( கட்டுரைத் தொகுப்பு), மல்லிகை முகங்கள் ( கட்டுரைத் தொகுப்பு), பத்தரே பிரசூத்திய (சிறு கதைகள் சிங்கள மொழி பெயர்ப்பு) அனுபவ முத்திரைகள், முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் (இவரின் இந்த சுய சரிதம் கந்தையா குமாரசாமி என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டு Undrawn Portrait For Unwritten Poetry என்ற பெயரிலும் வெளியானது) முதலிய நூல்களாகும்.

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கிய இயல் விருது, 2013ஆம் வருடம் டொமினிக் ஜீவா அவர்களுக்கு அவருடைய 88வது பிறந்த நாளை ஒட்டி சிறப்பு விருதாக வழங்கப்பட்டது.

'ஈழத்தமிழ் நவீன இலக்கிய எழுச்சியின் சின்னம்' எனப் போற்றப்படும் இவர் இந்த விருதைப் பெற்ற 15வது ஆளுமை ஆவார்.

இவரைப் பற்றிய பல ஆய்வு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. பல்வேறு நிலைப்பட்ட அறிஞர்கள், கல்வியாளர்கள், புலமையாளர்கள், படைப்பாளிகள் பலரது பங்களிப்புகளுடன் வெளிவந்த 'மல்லிகை' இதழ்களும், 'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளும் இன்று பல்கலைக் கழகப் பட்டமேற் படிப்புக்களுக்கான ஆய்வுக் களங்களாகப் பயன்படுகின்றன;

டொமினிக் ஜீவா இன்றி ஈழத்தமிழ் நவீன இலக்கியம் இல்லை என்று சொல்லலாம். இவர் தமது அயராத உழைப்பின் மூலம் ஒட்டுமொத்த ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை சேர்த்தார். இந்த முதுபெரும் எழுத்தாளர் தமது 93வது வயதில், கடந்த 28.01.2021 அன்று இறையடி சேர்ந்தார். இவரின் இழப்பு தமிழ் இலக்கிய உலகுக்கே பேரிழப்பாகும்.

## நகைச்சுவை

ஆசிரியர் :

நியூட்டன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் போது, அவர் தலையில் ஒரு ஆப்பிள் விழ, அவர் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார் . இதிலிருந்து என்ன தெரிகிறது?

மாணவன் :

இப்படி வகுப்பறையில உட்கார்ந்துக்கிட்டு சும்மா புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு இருந்தா ஒண்ணும் கண்டுபிடிக்க முடியாதுன்னு தெரியுது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி மகள்

கனகா பாலன்



உள்ளறைக் கட்டிலில் அமர்ந்து மகிமா படித்துக் கொண்டிருந்தாள். இளங்கலையில் இரண்டாவது வருடத்தில் அவள். எவ்வளவுக் கடினமான வேதியியல் சமன்பாடு களையும் சரியாக எழுதிவிடும் அவளுக்குச் மனப்பாடமாகச் சொல்லுதல் எப்போதும் கடினம். நாளைய வகுப்பில் வாய்மொழித் தேர்வு என்பதால் மாங்கு மாங்கென்று மல்லுக் கெட்டிக் கொண்டிருந்தாள். மடியில் இருதலையணைகளை வைத்து அவள் பார்வைக்குத் தோதாக புத்தக மேடையை அமைத்திருந்தாள்.

வெளியறையில் டிவி நியூஸ் சவுண்டு குறைவாக இருந்ததால் "ஏங்க ,நான் கோவிலுக்குப் போயிட்டு வர்ரேன், வந்து தோசை ஊத்தித்தரேன், மகி படிக்கட்டும் அவளை டிஸ்டர்ப் பண்ணாதீங்க சரியா.." என்று அம்மா, அப்பாவுக்கு உத்தரவு போடுவது கேட்டது மகிமாவுக்கும்...

"சரி, சரி சீக்கிரம் வா.இப்பவே மணி ஆறு ஆகிடுச்சி, இனி நீ எப்ப வந்து...»என்று அவர் சொல்லி முடிக்கும் முன்னே" உடனே மணிக்கணக்கு போட ஆரம்பிச்சிட்டீங்களா..எப்பப் பார்த்தாலும் கடிகார முள்ளுக்குப் பின்னாலயே ஓடுறது உங்களுக்கு சலிக்காதே.. உங்களுக்கு எட்டு மணிக்குத்தானே டின்னர் வேணும், அதுக்குள்ள வந்துருவேன், «என்று சொன்னவள் அவர் பதிலுக்குக் காத்திராமலே வாசலை விட்டு இறங்கி செருப்பு மாட்டிக் கொண்டிருந்தாள். பின்னாடியே எழுந்து வந்தவர் கேட்டுக்குப் பூட்டைப்போட்டுமறுபடியும் செய்தியோடு ஒன்றிப் போய்விட்டார்.

அம்மா வெளியில் சென்றது நல்லதாகப் போனதென்று, அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அப்பாவின் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்ட மகிமா ''அப்பா..'' என்று அழைத்த குரலில் இருந்த பாசத்திற்குப் பின்னால் ஏதோவொரு வேண்டலும் இருப்பதாக உணர்ந்தவர்

"என்னடா?"என்றார்..

''ரெண்டு நாளா அவந்திகா காலேஜ் வரலைப்பா.. நேத்து மேம் என்னைக் கேட்டாங்க..''

"ஓ.."

"ஆனால் அவ செமஸ்டர் ஃபீஸ் கட்டாததுனால வரலைனு இன்னைக் குத்தான் கேள்விப் பட்டேன்ப்பா.."

"நேத்து எதிர்ல அவ அப்பனைப் பார்த்தேன், மூஞ்சியைச் சிலுப்பிக்கிட்டு போனானே, ஒத்த வார்த்தை வாயைத் திறந்து கேட்டா கொறைஞ்சா போவான், இந்த வறட்டுக் கௌரவத்துக்கு ஒன்னும் கொறைச்சல் இல்ல ..""

"அதெல்லாம் அப்புறம் திட்டிக் கலாம், நாளைக்குத்தான் லாஸ்ட் டேட், ஒரு ஐடியா குடுங்க அப்பா..இல்லைனா அவ எக்ஸாம் எழுத முடியாது,அவளும் என்கூட கிளாஸ்ல பேசவே மாட்டா," என்று கவலையாகக் கூறினாள் மகிமா..

''அப்பனைப் போலத்தானே அந்தக் கழுதையும்இருக்கும்..»கொஞ்சம் கோபமாகவே கர்ஜித்து «சரி சரி அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனை எடுடா..” என்றார்

“ஏன் ப்பா பேச போறீங்களா, உங்க நம்பரைப் பார்த்தாலே கட் பண்ணிருவாரே..”

‘‘அவங்கிட்ட யாரு பேசப் போறா.. ஒரு ஐயாயிரத்தை கூகுள் பே யில போட்டு விடுவோம், அவனோட பொறுப்பில்லாத் தனத்துக்கு பிள்ளை யோட படிப்பு பாழாகனுமா..?” என்று திட்டிக் கொண்டே பணத்தை அனுப்பி வைத்தவர் “அவந்திகா காலேஜ் ஃபீஸ் கட்டவும்” என்ற மெஸேஜ் ஒன்றையும் இணைத்து அனுப்பி வைத்தார்...

அடுத்த பத்து நிமிடத்தில் போன் வந்தது “பெரியப்பா, உங்க நல்ல மனசுக்கு நன்றி..”

“சரி சரி ,உங்கப்பனை எங்க?”

‘‘வழக்கம்போல குடிச்சிட்டு மல்லாந்து கிடக்குறாரு, அவர் போன் என் கையில இருக்கு, அதான் நான் பேசுறேன் ..”

“ம்ம்”

“நான் காலேஜ்க்கு போகப் போறதில்லை, அதானால ஃபீஸ் க்கு பணம் தேவைப்படாது... எனக்கும் பத்தொன்பது வயசாச்சி, இன்னமும் எந்த இடத்திலும் எங்கப்பாவை ஒரு பொறுப்பானவரா நான் பார்த்தது மில்லை அவரும் அப்படி நடந்து கிட்டதும் இல்லை..”

“.......”

“வெளியுலகத்துப் பார்வைக்குத் தான் நாம ரெண்டு குடும்பமும் சண்டைக்காரங்க, ஆனா உங்களுக்குத் தெரியாம பெரியம்மா எங்களுக்கு உதவுறதும், அவுங்களுக்கு தெரியாம நீங்க தம்பி குடும்பத்துக்குப் பார்த்துப் பார்த்து செய்றதும் எனக்குப் பிடிக்கலை, எங்க அம்மா அப்பா வேணும்னா நல்லவேளைனு நினைக்கலாம், “

“சின்னப்புள்ள மாதிரி பேசும்மா..” என்று வெடுக்கென்று சொன்ன பதிலில் ஒரு செகண்ட் அமைதியாகி பின் தொடர்ந் தாள் அவந்திகா

‘“சின்னவன், சின்னவன்னு எங்க அப்பாவுக்கு செல்லம் கொடுத்து வளர்த்து, அவரை முழுச்சோம்பேறி ஆக்கியிருக்கீங்க, தாத்தா, பாட்டி இருக்குறவரை பெருசா ஒன்னும் தெரியலை, குண்டுசட்டியில குதிரை ஓட்டிக் காலத்தைக் கடத்திட்டாரு, இனி எத்தனை நாளைக்கு உங்களையே நம்பியிருக்க முடியும்,அவரும் கஷ்டத்தை உணரணும் பெரியப்பா, பணத்தை திருப்பி அனுப்பிறேன், கோவிச்சுக்கா தீங்க..’’ என்று குரலைத் தாழ்த்திச் சொன்னாள் அவந்திகா..

“அது பிறவிக்குணம், அவ் வளவு சீக்கிரத்துல அவன் மாறமாட்டான், வீணாவுல உன் படிப்பைக் கெடுத்துக்காத பாப்பா’’ என்று தம்பி மகளிடம் உரிமையாகச் சொன்னார் ராமசாமி

“எப்படியோ முட்டி மோதி நாங்களே சமாளிச்சிக்கிறோம் பெரியப்பா.. தப்பா எடுத்துக்காதீங்க, போனை வைக்கி றேன்” என்றதும் எதிர்முனையில் சத்தமின்றிப் போனது மொபைலில்.

பக்கத்திலே உட்கார்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டி ருந்த மகிமா ”அவந்திகா சொல்றதும் சரிதான் ப்பா..அந்த இடத்தில் நான் இருந்தாலும் இப்படித்தான் பேசியிருப்பேன்..” என்று சொல்ல எவ்வ ளவு யோசிக்கிறார்கள் இந்தக் காலத்துப் பிள்ளைகளென மனதுக்குள்ளே பெருமிதப் பட்டுக்கொண்டார் ராமாசாமி...

காலிங் பெல் சத்தம் கேட்டு வேகமாக ஓடிச்சென்று கதவைத் திறந்த ராமசாமி “சொன்ன நேரத்திற்கு சரியா வந்துட்டியே..” என்று இதுவரை எதுவுமே நடவாவது போல இயல்பாகப் பேசி அந்தச் சூழலையே மாற்றிவிட்டார்...

“ம்கும்...’’ என்று சொல்லி அவரை விலகிச் சென்றவள் நேராக சமய லறைக்குள் நுழைந்து அடுப்பைப் பற்ற வைத்தாள்...

சுடச்சுடத் தோசைகளை விழுங்கி னாலும் தம்பி மகள் பேசியது மனதுக்குள் வந்துக் கொண்டேயிருந்தது ராமசாமிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் செய்வீர் உலகத்தோரே..!!

மயக்கம் தீராத இரவுகளை
அளிக்கின்றான்..
மணம் வீசும் சோலையில் பூக்கின்றாள்

இதமான சொற்களுடன்
குளிர்விக்கின்றான்..
இலக்கியக் கவிதையாய்
மாறுகின்றாள்..

தனக்காக எதுவுமின்றி
வாரி வழங்குகிறான்
தணியாத தாகத்தை
தீர்க்கின்றாள்..

மாயாவி வித்தைகளை
காட்டுகின்றான்..
மான்விழியாள் பெண்மையை
உணர்கின்றாள்..

காலத்தை முழுவதும்
கொடுத்திட்டான்..
காலமெல்லாம் மனதில்
துதித்திட்டாள்..

காமினியின் பேரழகில்
தன்னையிழந்தான்..
காமனின் அம்புகளில்
அடிமைப்பட்டாள்..



பூவுலகம் காணாத
காதல் கொண்டான்..
பூவினமோ புலரியில்
மலர்ந்து நின்றாள்..

காமத்தை வென்று
காதல் கொண்டான்
மோகத்தை விடுத்து
பாசம் கொண்டாள்..

மோனத் தவத்தைக்
கவிபயின்றான்..
மோகினியோ
நளினமிகு பெண்ணானாள்..

அன்பைப் பொழிந்து
அவளை ஆட்கொண்டான்..
அடங்காத காட்டாறு
அவனுள் ஐக்கியமானாள்..

மூவுலகமும் போற்றும்
சுத்த வீரனவன்..
முப்பொழுதும் அவன்
நினைவில் வாழ்கின்றாள். ..

ஊண்.. உறக்கம்
இருப்பதில்லை
உறவிற்குள் எவரிடமும்
பகையில்லை..

பூமிப்பந்து பூப்பந்தாய்
தோன்றியதே
வாழ்க்கை நரகமெல்லாம்
சொர்க்கமாய் மாறியதே

செம்புலப் பெயல்நீர் போல்
இருவரும் கலந்தனரே
உலகத் துயர்களை
கணப்பொழுதில் மறந்தனரே

ஆதலால் காதல் செய்வீர்
உலகத்தோரே..!!

**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி பரம்பரை

(பாடல்)

**பல்லவி** :

ஆதி பரம்பரை வாழ்ந்த பழங்கதை கேளடா
நீதி இழந்தவன் நேர்மை உணர்ந்தவன் தானடா.

இவன் வீட்டுக் கூரையில நிலவு சிரிக்கும்
தினம் போகும் வீதியில நிழலும் துடிக்கும். (2)

ஆதிக்க வெறிகளைப் போதிக்கும் மனங்களைக்
கண்டு கொதிக்கும்..

ஆதி.

**சரணம் 1 :**

தேநீர்க் கடையோ?... தண்ணீர்க் கிணறோ?...
ஊருக்குப் பொதுவென்று இருந்ததில்லையே..
காலில் செருப்போ?... தோளில் துண்டோ?...
ஏழைக்கு அணிகின்ற உரிமையில்லையே...

பல கோவிலைக் கட்ட கற்களைச் சுமப்பான்...
தினம் கோபுர வாசல் கூட்டியும் இருப்பான்...
சாமிக்குக் காட்டும் ஆரத்தித் தட்டைப்
பார்வையால் தொட்டுத் தூரத்தில் தவிப்பான்...

இவன் நின்ன இடத்தில், அவன் தண்ணீர் தெளிப்பான்...
இவன் தந்த உழைப்பில், அவன் தின்னு பெருப்பான்...

சாதி வெறியில் தீய வழியில்
அவன் நினைத்ததை நடத்திட
இவன் கொதித்ததை எதிர்த்திட
தன்னையும் இழப்பான்...
இவன் தன்னையும் இழப்பான்...

ஆதி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சரணம் 2 :**

பள்ளிப் படிப்பில் பிள்ளை மனமோ?...
வேள்விக்குள் எரிகின்ற விறகு போன்றதே...
தகனத் தொழிலைச் செய்யும் மனமோ?...
கூண்டுக்குள் வளர்கின்ற பறவை போன்றதே...

அவன் உயர்ந்திட இவனோ ஓடென இளைப்பான்...
அவன் பார்வையில் இவனைப் புழுவென மிதிப்பான்...
ஆனந்த வாழ்வின் ஆரம்பம் என்றோ?...
கண்ணீரைக் கொண்டு காலங்கள் கடப்பான்...

பசி போக்கும் நிலத்தை, அவன் தட்டிப் பறிப்பான்...
பதில் கேட்டு எழுந்தால், அவன் காயம் கொடுப்பான்...

சாதி வெயிலில் சாகும் வரையில்
பல உரிமைகள் கருகிட
அதில் உயிர்ப்பலி பெருகிட
கங்கையும் சிவக்கும்...
நதி கங்கையும் சிவக்கும்...
ஆதி.....

**இதயம் விஜய்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் ஏன்

நான் கேட்கும்
கேள்விகளுக்கு எல்லாம்

நீ மௌனம் கொள்ளும்
நேரங்களில் எல்லாம்

எனக்குள் மரணங்கள் நிச்சயம்

பருந்தின் கால்களிடை
அகப்பட்ட
கோழிக்குஞ்சாய்
மன வலியின் உக்கிரம்

கொதித்த நீராய்
என் நாளங்களில்
குருதி நகர்ந்தபடி.

பல நாளாய் நீ எனை
பதை பதைப்பில்
விட்ட படி

ஆசைகள் கொண்டதில்லை
என் குணம்

உன் அருகோடு இருக்கவே
நாடுது என் மனம்

உறங்க விடாமல்
என்னுள்
உன் எண்ணங்கள்.

நெருங்க விடாமல்
உன் மௌனங்கள்

வாழ்ந்தால் போதுமென்று
வாழ்வதில் உண்மையில்லை

வாழ்வது உனக்காய்
என்றால்அதில்
பொய்மை துளியுமில்லை

மஞ்சத்தில் தலையணையில்
முகம் புதைக்கும்
போதெல்லாம்....

உன் எண்ணங்களுக்காக
ஏங்கும் என் மனம்

பரந்து கிடக்கும்
வானமாய்
உன் தவிர்த்தல்

உடைந்து போகும்
கரு மேகமாய்
என் விழிகள்

விழிகளில் ஊடுருவி நெஞ்சில்
குடிகொண்ட கண்ணாளா

இதழ்களின் அசைவில்
நான் நிலை தளர்ந்த பெண்மணி.

கடற்கரை அலையாய்
உனை தினம் நாடும்
மழலை நான்.

கரையோடு பாறையாய்
நீளும் மௌனம்
நீதான்டா

**கனகரத்தினம் செல்வராணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவே நீயும் கலையாதே

மேற்கூரை அகற்றி மாடிவீடு கட்டி
சீரற்ற வாழ்வை சீர்செய்ய முயல்வேன்!
ஊர்கூடி தூற்றும் உதவாத சொற்களை
ஊதித்தள்ளி நானும் உயரத்தில் அமர்வேன்!
பார்போற்றும் பாரதியாய் உலகில் நானும்
வேரூன்றி வாழவே வியர்வை சிந்துவேன்!
நார்நாராய்க் கிழிக்கும் நாகூசும் சொற்களை
நகத்தின் அழுக்கென நகர்ந்தேச் செல்வேனே!

எவரென்னைத் தடுத்தும் நில்லாது சென்றே
எட்டாத உயரத்தில் என்னைநான் வைத்து
ஏக்கத்தைத் துடைத்து ஏகாந்தம் பெறுவேன்!
கவசங்கள் போடாது சுயமுகம் காட்டியே
கலியுகத்தில் கண்ணனாய் நிலைத் திருப்பேன்!
காயத்தை தந்த மனிதரை எல்லாம்
கருணையால் கட்டித் தழுவி மகிழ்வேன்!

கழிவு நீரையூற்றிய கயவரின் கரங்களை
தானமிடச் சொல்லிக் கற்றுக் கொடுப்பேன்!
பழிச்சுமை தந்த பகைவனையும் மனதால்
பண்பினை வளர்க்கும் நற்பண்பைத் தருவேன்!
ஆழியைப் போல ஆழமான அன்பை
அனைவரும் தந்திட ஆழ்மனதைச் சுத்தமிடுவேன்!
அழுக்கான நிகழ்வுகளின் அடிவேரை நறுக்கி
அழகான நிகழ்வினை யாக்க முயல்வேன்!

துயரமது துரத்தி அடிக்கும் வேளையிலும்
துவளாது தொடர்வேன் என்றன் கொள்கையில்
வாடும் வாழ்வினை வளமாய் மாற்றவே
பாடுகிறேன் நானும் பலமுழுதும் கொண்டே!
ஓடுகிறேன் இயன்றவரை மூச்சினைப் பிடித்தே
நாடுகிறேன் நல்லோரின் நல்வழியை நாளும்!
தினமும் தேடுகிறேன் தேவையைத் தேடி
திடமான கனவே நீயும் கலையாதே!



**நா.பாண்டியராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை



# சகவாழ்வியம்

அரசியல்விஞ்ஞானத்துறை பட்டதாரியும்,ஊடகத்துறையில் டிப்ளொமா பட்டம் பெற்றவருமான பிஷ்ரின் முஹம்மத்தின் இரண்டாவது நூலான 'சகவாழ்வியம்' கடந்த மாதம் ஆறாம் திகதி, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப் பட்டது. இந் நிகழ்வை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரம் தலைவர் கலாபூஷணம் என்.எம். அமீன் தலைமை தாங்க, சிறப்பு அதிதியாக முன்னாள் தேர்தல்கள் ஆணையாளரும், தற்போதைய எல்லை மீள்நிர்ணயக்குழுத் தலைவருமான மகிந்த தேஷப்பிரிய கலந்து சிறப் பித்தார். அவரது உரையின் சாராம் சம், தேசிய ஒருமைப்பாடாக அமைந் திருந்தது. இறுதியாக 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' எனக் கூறி உரையை முடித்த போது, சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது. அங்கு எம்.எம்.மொஹமட் (தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்), மயில் வாகனம் திலகராஜ் (முன்னாள் பா.உ), கலாநிதி ஃபரீனா றுஸைக்(சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக் கழகம்) ஆகியோரும் உரை நிகழ்த்த, நூலாசிரியர் பிஷ்ரின் முஹம்மத் ஏற்புரை வழங்கினார்.

பன்மைத்துவச் சூழலில், இனங்களுக்கிடையிலான சகவாழ்வியத்தை மேம்படுத்த ஒன்றிணைந்த தேசியத்தின் அத்தியாவசியத்தை வலியுறுத்தும் இந்த ஆய்வு நூல், இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இதற்காக இவர் இலங்கையின் வரலாறு மற்றும் அரசியல் நடைமுறையின் அடிப்படைகளை உற்று நோக்கி, அலசி ஆராய்ந்து ஆழச் சிந்தித்து, விஞ்ஞான ரீதியில் தன் வாதங்களை முன்வைத்திருக்கும் விதம் பாராட்டுக்குரியதாகும்.

106 பக்கங்களுக்குள் இலங்கையின் அரசியல், வரலாற்று நிகழ்வுகளை வியக்கத்தக்க வகையில் உள்ளடக்கி பத்து தலைப்புகளில் கட்டுரைகளாகச் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் ஒற்றைத் தன்மையான மதம், இனம், கலாசாரம், பண்பாடு, மானிடவியல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப் படுமானால், அங்கே பன்மைத்தன்மை பற்றிய புரிதல் ஏற்பட்டிருக்க வாய்ப்பேயில்லை எனக் குறிப்பிடும் அவர், இவ்வித்தியாசங்கள் நாட்டில் உருவாவதற்கு காலநிலை, தரைத்தோற்றம்,வரலாறு,பொருளாதாரம்,சமூகக் காரணிகள் தாக்கம் செலுத்தியிருக்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'இதர சமூகங்களின் பண்பாடு, கலாச்சாரங்களைப் பிறிதொரு சமூகம் ஏற்று நடக்க வேண்டும் அல்லது பின்பற்ற வேண்டும் என்றில்லை. ஆனால், அவர்களது தனித்துவ அடையாளம், அவர்களது தனித்துவ பண்பாடுகள்,கலாச்சாரங்கள்,அவர்களுக்கான இருப்புகளை அவர்களுடைய அடையாளமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான், பன்மைத்துவ சூழலில் வாழ்கின்ற மக்கள் முன்னுரிமைப் படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய விடயங்களாக இருக்கின்றன' எனச் சொல்லும் நூலாசிரியர் 'இலங்கை பன்மைத்துவ சூழலில் பெருவாரியாக அரசியல் காரணிகளே இனங்களுக்கிடையிலான விரிசல் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளன' என்ற கசப்பான உண்மையை முன்வைக்கிறார்.

'இலங்கைச் சூழலில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டுநிலை உருவாகுவதற்கு வரலாறு நெடுகிலும் அரசியல் தலைவர்கள் விட்ட பாரிய தவறுகளே காரணமாக அமைந்துள்ளன. நாட்டில் தேசிய தலைவர்களால் நுண் தேசிய அரசியல் முறைமை மற்றும் ஜனநாயக ஆட்சி முறைமை பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாமல் சென்றமை,மற்றும் பிரச்சி னைகளை சரியான முறையில் கையாள முடியாது சுயநல அரசியலில் ஈடுபட்ட தாலேயே இனரீதியான முரண் பாடுகள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளன' எனத் தெள்ளத் தெளிவாக, ஆணித்தரமாக் கூறும் இவரின் துணிச்சலைப் பாராட்டியே ஆக வேண்டும்.

'அரசியலமைப்புச் சபை உருவாக்கத்தின் போதும், அதன் அங்கத்தவர்களைத்தெரிவுசெய்யும்போதும் பல இனங்களையும் உள்வாங்குவது தொடர்பில்,அரசியல்வாதிகளிடம் சிந்தனை வறுமை காணப்பட்டுள்ளது. அரசியல் வாதிகளின் பிற்போக்கான குறுகிய சிந்தனையாலேயே இந்த பன்மைத் துவ நாடு, பல தசாப்தங்களாக இரத்தக் காடாக மாறியது' எனும் காத்திரமான கருத்தை முன்வைப்பதன் மூலம் நம் நாட்டின் இரத்தச் சரித்திரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

இலங்கையின் அரசியல் களத்தில் மறைமுகமாக குலபேதம் பாரிய அளவில் தாக்கம் செலுத்தியுள்ளதைக் குறிப்பிடும் பிஷ்ரின் முஹம்மத் பன்மைத்துவ நாடொன்றைப் பொறுத்தமட்டில் ஒன்றிணைந்த தேசியமே தேவைப் படுகிறது என்பதையும் குறிப்பிட் டுள்ளார்.

சமூகம்எதிர்கொண்டுள்ளபாரிய பிரச்சினைகளை கருத்திற் கொண்டு தன் தொலைநோக்குப் பார்வையை செலுத்தி இந்நூலை எழுதியுள்ள இவர் 'அரசியல் ரீதியாக பல்வேறு கோணங்களிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இனங்களுக்கிடையிலான உறவில் குந்தகம் ஏற்படுத்துவதால், ஏற்படும் விளைவுகளை வெற்றி கொள்ளும் திறன் படைத்த அரசியல் தளத்திலுள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையிலான, சுயநல அரசியல் சிந்தனையற்ற, தூரநோக்கு சிந்தனையுடைய சமூக செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாட்டில் வரலாற்றுப் போக்கைச் சரியாகப் புரிந்து






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட, நாட்டின் போக்கில் மாற்றம் ஏற்படுத்தும் ஆற்றல் மிக்க சமூக செயற்பாட்டாளர்கள் உருவாக்கப்பட வேண்டும். இவர்கள் மத்தியில் இனம், மதம், குலம், கோத்திரம் என்ற வரையறை காணப்படக் கூடாது. இவற்றைப் புறந்தள்ளி எல்லா தளங்களிலும் உருவாக வேண்டும். இந்த சமூக செயற்பாட்டாளர்கள் ஊழல், மோசடி அற்றவர்களாக, தமக்குத் தாமே சுயவிசாரணையில் ஈடுபடுத்திக் கொண்ட மனிதர்களாக மாறவேண்டும். இந்த செயற்பாட்டுக்குழு ,நாடு இனரீதியாக எதிர்கொள்ளும் சவால் களை எவ்வாறு முறியடிக்கலாம் என்பதை சர்வதேச அரசியலுடன் ஒப்பிட்டு முடிவுகளை எடுக்கும் ஆற்றல் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

கடந்தகாலக் கதைகளை மறந்து, இனவாதத்திற்கு மக்கள் மத்தியில் உள்ள கிராக்கியை கட்டங் கட்டமாக ஒழித்து, சக வாழ்வைக் கட்டியெழுப்புவதோடு, மற்றவர்கள் மீதும் மரியாதை செலுத்தும் கட்டமைப்பை உருவாக்க இக்குழு செயற்பட வேண்டும். இந்தக் குழு அரசியல் ரீதியான நோக்கு இல்லாமல் சமூக சிந்தனா மாற்றங்களுக்காக செயல்படுமாக இருந்தால், நிச்சயம் இனவாத நோயை ஒழித்து சகவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும் என்ற விலைமதிக்க முடியாத ஓர் தீர்வையும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் பிரதிநிதியாக முன்வைக்கிறார். உண்மைத் தகவல்களைத் திரட்டி, பல அடிக்குறிப்புகளோடு சமூக சிந்தனையுடன் எழுதப்பட்டிருக்கும் 'சகவாழ்வியம்' மக்கள் மனதில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி நன்மை பயக்கும். நூலாசிரியர் எதிர்காலத்தில் இதுபோன்ற காத்திரமான படைப்புகளை உலகுக்கு அளிக்க நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

- வஃபீரா வஃபி

---

# என்னுயிரைத் தந்திடுவேன்



கலை வளர்த்தேன் - கண்ணால்
கவி வளர்த்தேன்!
உனை நினைத்தேன் - உன்னில்
உயிர் வளர்த்தேன்!
எனை மறந்தேன் - என்னின்
நிலை உணர்ந்தேன்!
கண்ணில் மறைந்தேன் - காணா
கரை கடந்தேன்!
வருவேன் வாஞ்சையுடன் - வாழ்வில்
நலம் தருவேன்!
உன்னுயிரை உயர்த்திடவே - நானும்
என்னுயிரைத் தந்திடுவேன்!
புஞ்சை நிலமதிலே - கோபுரம்
கட்டி வைப்பேன்!
உலகோர் போற்றிடவே - உயர்வாய்
வலம் வருவேன்!

தமிழ்நெஞ்சம் அமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உழைப்பாளி

கண்டாங்கி சேலை கட்டி
களையெடுக்கும் காளியம்மாவுக்கு
காலநேரந் தெரியாது
களத்து மேட்டுக்கு வந்துட்டா..!

இவளுக்கு..
உடலெல்லாம் சேறாச்சு
உள்ளமோ வெளுப்பாச்சு..!

பூப்போல பாத்துப்பா
புதுநெல்லு பயிரெல்லாம்
ஊடாகி முளைச்சிருக்கும்
களையெல்லாம் பிடுங்கிடுவா
கருத்தாக நாளெல்லாம்..!

பச்சை பயிரெல்லாம்
பாசக்காரி இவளுக்கு
பச்சைப்புள்ளே போலாகும்..!

பூச்சிபொட்டு இருந்தாலும்
புறந்தள்ளி இவ உழைப்பா..!

நாலு சனம் இவளை நம்பி
இருக்குதுன்னு _தான் சொல்லி
நெஞ்ச நிமித்திக்குவா..!

இவளாட்டம்
உழைப்புக்கு
மரியாதையை
உரியமுறை தந்துழைச்சா
அகிலமே பின்னே வரும்
அவனியிலே பேர் நிலைக்கும்..!

- அனுராஜ்

## தணிந்த இசை

அதீதக் கனவுகளோடு
காய்ந்து எரிய வேண்டியதாக
இருந்தது அந்த மூங்கில்காடு
எங்கிருந்தோ துளிநீர்விட
அப்பெருங்காட்டில் கனவின்
புல்லாங்குழல்  முளைக்கத்
தொடங்கிவிட்டன...

துளிர்த்த புல்லாங்குழல்கள்
கண்ணனின் நாத ஒலி கேட்கும்
ஸ்வரங்களைக் கொண்டிருந்தன

இசை இரவினில் தாலாட்டையும்
சேர்த்துப் பிளிறிய போது
கண்ணுறங்கா காட்டின் எரி
தணியத்தான் செய்யும்...

தணிந்தது தணிந்ததுதான்

இனி எரியாக் காட்டின்
கனவுகளைப்
பாடும் இசை இரவுகள்

கண்ணனின் புல்லாங்குழலோடு...

**முனைவர்**
**பெண்ணியம் செல்வக்குமாரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பைங்கிளி தேடியே...

பூமரத்துக் காட்டுக்குள்ளே போனதென்ன பைங்கிளியே
அத்தை மகன் நான் தவிக்கச் சென்றதென்ன பொன்மயிலே
கல்லூரித் தேர்வெழுதி உனைக்காண ஓடிவந்தேன்
கண்ணுக்குள்ளே உன்னழகை பத்திரமா பொத்தி வைச்சேன்
கைவளையல் கலகலக்க கதை கேட்க வந்த என்னை
கால்கொலுசு சத்தமிட மறைஞ்சதென்ன மாங்குயிலே
உன் பின்னாலே ஓடி வந்தேன் மல்லிகைப்பூ வாசத்திலே
பரிசு ஒன்னு வாங்கி வந்தேன் உன் நினைப்பில்
வாங்கிக்க வேணாமா, வந்துவிடு பூங்குயிலே
கால்கடுக்க நான் நிற்க!! உன்னை, வரவழைக்கும் தந்திரமே
பின்னாலே வந்து என் கண்பொத்தி நிற்பவளே
மஞ்சப்பூ தோட்டத்திலே, மஞ்சள் நிறச் சேலையிலே
மயக்குறியே மானேநீ! தவிக்கிறேன்டி நானே
பரிசப் பிரிச்சு பளிச்சென்று நீ சிரிக்க
வெண்முத்துமாலைப் பார்த்து மெல்லத் தோள்சாய
பாவிமனம் பதறுதடி நாட்குறிக்க ஏங்குதடி!

**நாகலெட்சுமி இராஜகோபாலன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org